இந்த விளக்கமிழ்வு நாரஹேன்பிட்ட எலைற்றேடியோ காட்சியறையில் மற்றும் shop.eliteradio.com மூலமான கொள்வனவுகளுக்கு மட்டும் வழங்கப்படும்.

Ceiling
Pedestal
Table
Orbital
Wall
Exhaust

KDK
SINCE 1909 JAPAN

ELITERADIO
Since 1959
facebook.com/kdksrilanka | shop.eliteradio.com
வார நாட்களில்: 9:00am - 5:00pm | சனிக்கிழமை: 9:00am - 1:00pm

Follow us

# தமிழன்

THAMILAN தமிලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 14 சோபகிருது வருடம், ஆனி மாதம் 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(11.07.2023) ஹிஜ்ரி 1444, துல்ஹஜ் - 22, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50

BEAT THE HEAT
The Reliable Fan
1st July to 31st July 2023
DISCOUNT 15% (On selected models only)
*Conditions apply
KDK
SINCE 1909 JAPAN
Ceiling | Pedestal | Table | Orbital | Wall | Exhaust
ELITERADIO
Since 1959
Inquiries (011) 250 0823 | (011) 236 8472 / 73 / 74

## மன்னம்பிட்டியில் கோர விபத்து



உயிரிழப்பு எண்ணிக்கை 12 ஆக உயர்ந்தது

02பக்கம்

## 24 மணித்தியாலத்தில் 18 பேர் பலி 96 பேர் காயம்

நா. தினுஷா

நாட்டில் நேற்று (10) காலை ஆறு மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேரத்துக்குள் இடம்பெற்ற வாகன விபத்துகளில் 18 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 96 பேர் காயங்களுக்குள்ளாகியுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

வாகன விபத்துகளினால் நேற்று முன்தினம் (09) மாத்திரம் 16 பேர் உயிரிழந்துள்ளதுடன் இவ் விபத்துகள்... 02 பக்கம்

## அம்பன்பொல, புசல்லாவை பகுதிகளில் நேற்று விபத்து

த. யுவராஜ், ஆ.ரமேஸ், பீ. கேதீஸ்



அம்பன்பொல, புசல்லாவை ஆகிய பகுதிகளில் நேற்று இடம்பெற்ற இருவேறு விபத்துகளில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் 37 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பன்பொல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாதெனிய – அநுராதபுரம் வீதியிலுள்ள அம்பன்பொல... 02 பக்கம்

# பணிப்புறக்கணிப்பு!

## சரத் வீரசேகரவின் வில்லங்கப் பேச்சுக்கு எதிர்ப்பு வெளியிட்டு வடக்கில் இன்று சட்டத்தரணிகள் போர்க்கொடி

வட மாகாணத்திலுள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் இன்று முன்னிலையாகாமல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதென வடக்குக்கு மாகாண சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

முல்லைத்தீவு, குருந்தூர்மலையில் தமிழ் பௌத்த வழிபாட்டு எச்சங்களின் மீது, சட்டவிரோதமாக கட்டப்பட்டுள்ள சிங்கள பௌத்த கட்டுமானங்களை பார்வையிட முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜா அண்மையில் சென்றிருந்தார்.

அப்போது தனது குழுவினருடன் அங்கு வந்திருந்த பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்.. 02 பக்கம்

## 2024 இல் ஜனாதிபதித் தேர்தல்



சமன் ரத்னபிரிய தெரிவிப்பு

கே. சுபானி

"2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்பது உறுதியாகியுள்ளது. இத்தேர்தலில் மக்கள் ஆணைமூலம் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவுசெய்ய வேண்டும்" என ஜனாதிபதியின் தொழிற்சங்கப் பணிப்பாளர் சமன் ரத்னபிரிய தெரிவித்துள்ளார்.

பதுளையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இவ்வருடம் எந்தத் தேர்தலும் நடத்தப்படா விட்டாலும் எதிர்வரும் 2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது உறுதியாகியுள்ளது.

எதிர்வரும் 2024ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டாக இருக்கும். 02 பக்கம்



ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றிலுள்ள பணத்தை அரசாங்கம் கையகப்படுத்தப்போவதாக குற்றம் சுமத்தி அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கொழும்புத் துறைமுக அதிகார சபையின் ஊழியர்கள் துறைமுக நுழைவாயிலுக்கு முன்பாக நேற்று (10) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே




## இலங்கையில் சிறைப்படுத்தப்பட்ட மீனவர்களை விடுவிக்க கோரிக்கை

### இந்திய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் கடிதம்



இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் 15 பேரையும் அவர்களது மீன்பிடிப் படகு களையும் உடனடியாக விடுவிக்க உரிய நடவடிக்கைகளை எடுக்கக் கோரி மத்திய வெளியுறவு அமைச்சர்... » 02 பக்கம்

## எதிர்க்கட்சியிலிருந்து சுயாதீன தெரிவுக்குழு

### சஜித் பிரேமதாச யோசனை



பாராளுமன்றத்தில் சிறப்புரிமைகள் காணப்படுகின் றமையினால் எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் தனது தலைமையில் பொருளாதார சீரழிவுக்கான காரணங்களை கண்டறிய எதிர்க்கட்சியின் தெரிவுக்குழுவொன்றை ஸ்தாபித்து... 02 பக்கம்

## அரசில் நிலவும் இழுபறி நிலைமை



### தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலென ஜீ.எல். குற்றச்சாட்டு

த. யுவராஜ்

பொலிஸ் மா அதிபர் ஓய்வு பெறும்போது, புதிய பொலிஸ் மா அதிபர் ஒருவரை நியமிக்க முடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளது. இதனால் தேசிய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் உருவாகியுள்ளது.

மேலும், பதில் பொலிஸ் மா அதிபராக... 02 பக்கம்

## புலிகளின் கப்பல்களை பயன்படுத்தத் தயார்

### இலங்கை - இந்திய கப்பல்சேவை குறித்து அமைச்சர் நிமல் அறிவிப்பு



த. யுவராஜ்

தமிழ் நாட்டின் நாகப் பட்டின துறைமுகத் தில் உள்ள விடுதலைப் புலிகளின் கப்பல்களைப் பயன்படுத்தி இலங்கை- இந்திய... 02 பக்கம்

## 15 நிதி நிறுவனங்களுக்கு மத்திய வங்கி தடை

த. யுவராஜ்

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை, 15 பணப் பரிமாற்று நிறுவனங்களின் அனுமதிப் பத்திரங்களை இரத்துச் செய்வதாக நேற்று அறிவித்துள்ளது.

2022ஆம் ஆண்டுக்கான அனுமதிப்பத்திரங்களின் நிபந்தனைக்கு இணங்காத காரணத்தினால் 15 பணப் பரிமாற்று நிறுவனங்களின் அனுமதிப் பத்திரங்களை புதுப்பிக்காமல் இரத்துச் செய்ய இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை தீர்மானித்துள்ளது.

## முஸ்லிம், சிங்கள, மலையக மக்களுக்கும் சமமான உரிமை

### ஈழத் தமிழர்களுக்கு சார்பான வரைபில் முன்மொழியப்படுமென பேராசிரியர் கணேசலிங்கம் தெரிவிப்பு



கனகராசா சரவணன்

வடக்கு கிழக்கில் ஈழத் தமிழர் களுக்கு எவ்வளவு முன்னுரிமை வழங்கப்படுகின்றதோ அதேயளவு... 02 பக்கம்

## உஷ்



இலங்கை மத்திய வங்கியால் தடைசெய்யப்பட்ட பண பரிமாற்று நிலையங்களை மீளத் திறப்பதற்கான அனுமதியை பெற்றுக்கொடுக்க அரசியல் அழுத்தங்கள் வழங்கப்படுகின்றனவாம்.

ஆனால் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் உட்பட்ட நிதிச் சபை அனுமதி வழங்காததால் அரசியல்வாதிகள் பலரும் மத்திய வங்கியின் செயற்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதியிடம் முறையிட ஆரம்பித்துள்ளனராம்.

## இந்திய இழுவைப் படகுகள் தடை செய்யப்பட வேண்டும்



### தமிழ்க் கட்சிகளை ஓரணியில் வலியுறுத்துமாறு யாழ். மீனவ சங்கங்கள் கோரிக்கை

யாழ். செய்தியாளர்

எல்லை தாண்டிய இந்திய இழுவைப் படகுகளை தடை செய்யுமாறு இந்தியாவுக்குச் செல்லும் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தமிழ்க் கட்சிகள் ஓரணியில் வலியுறுத்த வேண்டும் என யாழ். மாவட்ட கடற்றொழில் சங்கங்கள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனத்தில் நேற்று (10) இடம்பெற்ற... 02 பக்கம்

## சுகாதார ஊழியர்கள் எதிர்ப்பு நடவடிக்கை

### தேசிய வைத்தியசாலை பணிகள் நாளை பாதிப்படையும் அபாயம்

நா. தினுஷா

நாடு முழுவதுமுள்ள அரச வைத்தியசாலைகளில் நிலவும் குறைபாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளை (12) கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தொழிற்சங்க நடவடிக்கையொன்றை முன்னெடுக்கவுள்ளதாக நிறைவுகாண் மருத்துவ தொழில்வல்லுநர்கள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இந்த தொழிற்சங்க நடவடிக்கையில், சுகாதார சேவைப்பிரிவினர், இரசாயன ஆய்வுகூட சேவைப்பிரிவு, கதிரியக்க பிரிவு உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் இந்த தொழிற்சங்க நடவடிக்கைகளில் கலந்து கொள்வார்கள் என்றும் இதனால் நாளை... 02 பக்கம்

## கமெண்ட் கந்தர்...



சிங்கள மக்களுக்கும் சமவுரிமையோ? நல்லா இருக்குதுடாப்பா உங்களின்ர கூத்து...

## புலிகளின்...

படகுச் சேவையைத் தொடங்க இலங்கை தயாராக இருப்பதாக போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நேற்று தெரிவித்துள்ளார்.

இது குறித்து நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

தென்னிந்தியாவுக்கும் (பாண்டிச்சேரி) காங்கேசன்துறைக்கும் (கேகேஎஸ்) எந்த நேரத்திலும் படகுச் சேவையைத் தொடங்க இலங்கை தயாராக இருப்பதாகவும் ஆனால் இந்தியா அனுமதி வழங்காததால்தான் இந்தச் சேவையைத் தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2011 ஆம் ஆண்டு இரு நாடுகளுக்கும் இடையே கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி ஒரு கூட்டுக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

"இதுவரை எந்த பிரச்சினையும் இல்லை, ஆனால் எங்களுக்கு படகு சேவை வேண்டும். காங்கேசன்துறை துறைமுகத்தில் பயணிகள் முனையம் மற்றும் பிற வசதிகளை நாங்கள் அமைத்துள்ளோம். இந்தியாவுடன் எங்களுக்கு கிடைத்த சமீபத்திய தகவல்களின்படி, அவர்கள் படகு சேவையை மாத்திரமே ஆரம்பிக்க முடியும் என கூறியுள்ளார்கள். தமிழ்நாட்டின் நாகப்பட்டினத்திலிருந்து மாத்திரம் இந்த சேவையை தொடங்க முடியும் எனவும் இந்தியா குறிப்பிட்டுள்ளது" என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இந்தியாவுடனான பாதுகாப்பு மதிப்பீட்டின்படி இலங்கைக்கு எந்த பிரச்சினையும் இல்லை. இந்த திட்டத்துக்கு யார் ஒப்புதல் அளித்தாலும், நாங்கள் அதை ஏற்றுக்கொள்வோம் என்றார்.

படகு நடத்துநர்கள் இந்திய அரசாங்கத்தை தொடர்புகொண்டு, தங்களின் நற்சான்றிதழ்கள் மற்றும் அவர்களின் உண்மையான தன்மையை நிரூபித்து, நாகப்பட்டினத்திலிருந்து படகு தொடங்குவதற்கு இந்தியாவிடம் அனுமதி பெற வேண்டும். இந்திய அரசாங்கம் பச்சை கொடி காட்டிய தருணத்திலிருந்து, எந்தவொரு கப்பலையும் பெறுவதற்கு நாங்கள் அனுமதி வழங்குவோம் என்றார்.

படகு நடத்துனர்களை இந்தியாவுக்கு வந்து அங்கு படகு நடத்துனர்களாக அங்கீகரிக்குமாறு அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

படகு நடத்துனர்களிடம் இருந்து பதினைந்து விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகர் கூறினார். இந்தியாவில் சில தெரிவு நடைமுறைகள் இருக்கும். படகு நடத்துனர்களுக்கான 15 விண்ணப்பங்களையும் இந்திய அரசாங்கம் அங்கீகரித்தால் எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய உயர்ஸ்தானிகர் படகு நடத்துனர்களிடமிருந்து பதினைந்து விண்ணப்பங்களைப் பெற்றதாக தெரியவருகிறது.

இந்தியாவில் சில தேர்வு நடைமுறைகள் இருக்கும். படகு நடத்துனர்களுக்கான 15 விண்ணப்பங்களையும் இந்திய அரசாங்கம் அங்கீகரித்தால் எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

## மன்னம்பிட்டியில்...

நா. தினுஷா, கனகராசா சரவணன்

பொலன்னறுவை, மன்னம்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டலீய பாலத்தில் நேற்று முன்தினம் (09) இரவு இடம்பெற்ற பஸ் விபத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் உட்பட 12 பேர் உயிரிழந்துள்ளதுடன் 40 பேர் காயமடைந்துள்ளதாக மன்னம்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

பயணிகள் பஸ் பாலத்தை விட்டு விலகி ஆற்றில் விழுந்து நீரில் மூழ்கியதால் இந்தக் கோர விபத்து இடம்பெற்றிருந்ததுடன் பஸ் சாரதியின் கவனமின்மையினாலேயே இந்த விபத்து நேர்ந்திருந்ததாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

விபத்துக்குள்ளான பஸ்ஸின் சாரதி நேற்று (10) கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் இதற்கு முன்னரும் கைதான சாரதிக்கு அபாயகரமான முறையில் வாகனம் செலுத்தியமை தொடர்பில் தண்டனை விதிக்கப்பட்டிருந்ததாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பொலன்னறுவையிலிருந்து காத்தான்குடி வரையில் பயணித்துக்கொண்டிருந்த இந்த பஸ், மன்னம்பிட்டி பிரதான பாலத்துக்கு அருகிலுள்ள கொட்டலீய என்றழைக்கப்படும் பாலத்திலிருந்து விலகி வேலிகளை உடைத்துக்கொண்டு ஆற்றில் விழுந்து விபத்துக்குள்ளாகியிருந்தது.

இவ்வாறு விழுந்த பஸ் நீரில் மூழ்கியதால் ஏற்பட்ட காயம் மற்றும் உடல் உபாதைகளின் காரணமாக 40 பேர் பொலன்னறுவை வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். இந்தச் சம்பவத்தில் பெண்கள் உள்ளடங்களாக 12 பேர் உயிரிழந்துள்ளனர். இரவு நேரத்தில் இந்த விபத்து இடம்பெற்றதால் சகலரையும் மீட்க முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. அதற்கமைய, சேற்றில் வேறு நபர்களின் சடலங்கள் சிக்கியுள்ளனவா என்று தேடிப்பார்க்கும் பணிகளை கடற்படையினரும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர். சிகிச்சைப் பெற்று வருபவர்களில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் சிலரும் இருக்கின்றனர்.

மேலும், சாரதியின் கவனமின்மையினாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர் கைதுசெய்யப்பட்டு பொலன்னறுவை பொலிஸாரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளார். இதற்கு முன்னர், அபாயகரமான முறையில் வாகனம் செலுத்துவது தொடர்பில் பொலன்னறுவை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ள சாரதிக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் தொடர் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் குறித்த சாரதி மதுபானம் அருந்தியிருக்கவில்லை என்பதும் பரிசோதனைகளில் உறுதியாகியுள்ளது. மேலும், போதைப்பொருள் பயன்படுத்தியிருந்தாரா என்பது தொடர்பிலான பரிசோதனை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை, கதுருவெல பிரதேசத்திலிருந்து காத்தான்குடி வரையில் பயணித்த இந்த பஸ்ஸுக்கு இலங்கை போக்குவரத்துச் சபையினால் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. இருந்தபோதும் அதிகார சபையினால் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இந்த பஸ் தொடர்ச்சியாக இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. 50 – 60 வரையிலானவர்கள் இந்த பஸ்ஸில் பயணித்திருக்கிறார்கள். இந்த விபத்து இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் பஸ் அதிக வேகத்தில் பயணித்துள்ளதாகவும் வேகக் கட்டுப்பாட்டை இழந்ததால் இந்த விபத்து நேர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுவதாக தேசிய போக்குவரத்து சபையின் தலைவர் சஷி வெல்கம தெரிவித்தார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## 24 மணித்தியாலத்தில்...

தொடர்ந்து இடம்பெறுமாக இருந்தால் எதிர்வரும் நாட்களில் விபத்துகளினால் இடம்பெறும் மரணங்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் இருப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று (10) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நேற்று (நேற்று முன்தினம்) மற்றும் இன்று (நேற்று) காலை வரையான காலப்பகுதியில் பல்வேறு பஸ் விபத்துகள் பதிவாகியிருந்தன. நேற்று (09) மாலை பூண்டுலோயா நகரில் பஸ் விபத்தொன்று பதிவாகியிருந்தது. இந்த விபத்தில் 10 – 15 அடி பள்ளத்தில் பஸ் விழுந்ததால் இந்த விபத்து இடம்பெற்றிருந்தது. இந்த விபத்தில் பெண்கள் 26 பேர் காயத்துக்குள்ளாகியிருந்தார்கள். தேயிலை தொழிற்சாலையொன்றில் கடமையாற்றிவிட்டு மீண்டும் வீடு திரும்பிக்கொண்டிருந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. தொழில்நுட்ப கோளாறின் காரணமாகவே இந்த விபத்து பதிவாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு பொலன்னறுவை, மன்னம்பிட்டிய பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற பஸ் விபத்தில், 12 பேர் உயிரிழந்திருந்ததுடன் 40 பேர் வரையில் காயங்களுக்குள்ளாகியிருந்தனர்.

இதேவேளை, நேற்று (10) காலை அம்பன்பொல பிரதேசத்தில் 29 பேர் காயங்களுக்குள்ளாகியுள்ளதுடன் இருவர் உயிரிழந்திருந்தனர்.

மட்டக்களப்பு பிரதேசத்தில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை 09) மாலை முச்சக்கரவண்டி விபத்துக்குள்ளாகியிருந்தது. தாயும் குழந்தையும் பயணித்துக் கொண்டிருந்த முச்சக்கரவண்டியே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. அந்த பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருந்த மதகில் மோதியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றிருந்தது. விபத்துக்குள்ளான தாயும் குழந்தையும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் ஒரு வயதும் 02 மாதங்களும் நிறைந்த குழந்தையே உயிரிழந்துள்ளது.

அதற்கமைய, நேற்று (நேற்று முன்தினம்) இடம்பெற்ற விபத்துகளில் மாத்திரம் 14 பேர் உயிரிழந்துள்ளனர். வேறு தினங்களில் இடம்பெற்ற விபத்துகளுடன் தொடர்புடைய வகையில், நேற்று மாத்திரம் 16பேர் உயிரிழந்துள்ளனர். நேற்று இடம்பெற்ற விபத்துகளினால் எதிர்வரும் நாட்களில் மேலும் மரணங்கள் அதிகரிப்பதற்கான வாய்ப்புகளும் இருக்கின்றன.

## பணிப்புறக்கணிப்பு!...

சரத் வீரசேகர, தேவையில்லாமல் மூக்கை நுழைத்து வாங்கிக் கட்டினார். அரசியல்வாதிகள் நீதிமன்ற விசாரணையில் மூக்கை நுழைக்கக் கூடாது என எச்சரித்து வீரசேகரவை அங்கிருந்து நீதிபதி அகற்றினார்.

இதனால் கொதிப்படைந்த வீரசேகர, அண்மையில் பாராளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி, நீதித்துறையிலுள்ள தமிழர்களுக்கு மிரட்டல் விடுக்கும் பாணியில் பேசியிருந்தார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காக இன்று வட மாகாணத்திலுள்ள அனைத்து நீதிமன்ற நடவடிக்கைகளிலிருந்தும் விலகியிருக்க வடமாகாண சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானித்துள்ளது. அத்துடன், இன்று காலை 9.30 மணிக்கு வடக்கிலுள்ள சட்டத்தரணிகள் முல்லைத்தீவு நீதிமன்றத்துக்கு எதிரில் ஒன்றுகூடி ஆர்ப்பாட்டமொன்றிலும் ஈடுபடவுள்ளனர்.

## 2024 இல்...

அதில் முதலில் ஜனாதிபதித் தேர்தலே நடைபெறும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை 2024ஆம் ஆண்டு மக்களாணை மூலம் ஜனாதிபதியாக்க வேண்டும் என்பதை நான் பரிந்துரைக்கிறேன் - எனத் தெரிவித்துள்ளார்.

## அரசில் நிலவும்...

சி.டி.விக்கிரமரத்னவுக்கு சேவை நீடிப்பு என்பது சட்டவிரோதமானது எனவும் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று (10) தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். பொலிஸ் மா அதிபர் நியமனம் தொடர்பில் அரசாங்கத்துக்குள் நிலவும் இழுபறி நிலை காரணமாக தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், கூடிய விரைவில் புதிய பொலிஸ் மா அதிபரை நியமிக்கும் பொறுப்பு அரசியலமைப்பு பேரவைக்கு இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் தற்போது கொலை, பலாத்காரம், போதைப்பொருள் போன்ற சட்டவிரோதச் செயல்கள் பெருகிவிட்டதாகவும் அதனைக் கட்டுப்படுத்த திறமையான பொலிஸ் சேவை தேவை என்றும் தெரிவித்தார்.

அத்தோடு பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொடவின் பிரேரணை நிறைவேற்றப்பட்டால், பிரதமரிடம் உள்ள மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு மிகவும் பலம்பொருந்தியதாக மாறும். இதனால் பிரதமர் சர்வ வல்லமை படைத்தவராக இருப்பார். இவ்வாறு மாறினால் பிரதமரால் தனக்கு ஏற்றவாறு உள்ளூராட்சி, மாகாண சபைகளை மாற்றியமைக்க முடியுமென அவர் மேலும் குறிப்பிட்டார்.

## எதிர்க்கட்சியிலிருந்து...

இதனை முன்கொண்டு செல்வோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

எதிர்க்கட்சி ஒன்றியத்தின் வாராந்த செயற்குழுக் கூட்டம் நேற்று (10) பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் இடம்பெற்றபோது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்நாட்டில் ஏற்பட்ட நிதி வங்குரோத்து நிலைக்கான ஏதுவாக அமைந்த காரணங்களை வெளிப்படையாகக் கண்டறிந்து யதார்த்தங்களை தெரிந்து கொள்ளும் முகமாக பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்றை ஸ்தாபிக்கக்கோரி ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா யோசனை முன்வைத்தார். அதன் பிரகாரம் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரது கையொப்பத்துடன் சபாநாயகரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டாலும் இந்த தெரிவுக்குழுவின் தவிசாளராக பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளரான சாகர காரியவசம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது வெறுமனே பேச்சுகளுடன் மட்டுப்படுத்தப்படும் என்றும் பெசில் ராஜபக்ஷ உள்ளிட்ட தரப்பை நிரபராதியாக்கி அவர்களை சரிகாணும் செயற்பாடுமே இடம்பெறும் என்பது தெளிவாக புலப்படுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கடந்த வார பாராளுமன்ற அமர்வை நோக்கும் போதும் பெசில் ராஜபக்ஷவின் கும்பல் ஊழல் எதிர்ப்புச் சட்டமூலத்தை நிறைவேற்ற மேலும் இரு வாரங்களுக்கு இழுத்தடிப்புச் செய்யும் பிரயத்தனத்தை முன்னெடுத்தாலும், எதிர்க்கட்சியில் எண்ணிக்கை குறைவாக காணப்பட்டாலும் எதிர்க்கட்சியின் முயற்சியால் குறித்த பிரேரணை நிறைவேற்றப்பட்டதாகவும் இதற்கு ஒத்துழைப்பு நல்கிய எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகலருக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

போராட்ட காலத்துக்கு பிற்பாடான இந்த விடுபாட்டு காலப்பிரிவில் தமக்கு சார்பானவர்களை, தமது பிரதிநிதிகளை பயன்படுத்தி தம்மை சுத்தப்படுத்தி நல்லவர்களாக காண்பிப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருவதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ள இந்த தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கும் சகல எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அதிலிருந்து விலகி எதிர்க்கட்சியாக நாம் அனைவரும் ஒன்றிணைந்து சபாநாயகர் அண்மையில் தெரிவித்ததன் பிரகாரம்,எதிர்க்கட்சித் தலைவருக்கு பாராளுமன்றத்தில் சிறப்புரிமைகள் காணப்படுகின்றமையினால் எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் தனது தலைமையில் இந்த பொருளாதார சீரழிவுக்கான காரணங்களை கண்டறிய எதிர்க்கட்சியின் தெரிவுக்குழுவொன்றை ஸ்தாபித்து இதனை முன்கொண்டு செல்வோம் என்றும் அழைப்பு விடுத்தார். பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 225 பேருக்கும் இதில் பங்கேற்க அழைப்பு விடுப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## முஸ்லிம், சிங்கள,...

முஸ்லிம், சிங்கள, மலையக மக்களுக்கும் உரித்துடைய பங்கினை ஈழத் தமிழர்களுக்கு சார்பாக முன்வைக்கப்படவுள்ள வரைபில் உள்ளடக்கியுள்ளதுடன் இது தமிழர்களின் அரசியல் பிரச்சினைக்கான அங்கீகரிக்கப்பட்ட ஒரே தீர்வாக அமையுமென மக்கள் சிந்தனை மைய இணைத்தலைவரும் யாழ். பல்கலைக்கழக அரசியல்துறை தலைவருமான பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம் தெரிவித்தார்.

மக்கள் சிந்தனை மையம் தமிழ் மக்களின் தீர்வாக அமைக்கப்படும் வரைபு தொடர்பாக கிழக்கு மாகாணத்திலுள்ள சிவில் அமைப்புகளுடனான கலந்துரையாடல் மட்டக்களப்பு ஈஸ்ட்லகுன் ஹோட்டலில் ஞாயிற்றுக்கிழமை (09) இடம்பெற்றது. இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடக்கு கிழக்கை சார்ந்திருக்கக்கூடிய அரசில் தீர்வை நோக்கி பல தளத்தில் பல்வேறுபட்ட வரைபுகள் முதன்மைப்படுத்தப்பட்டன. வரைபுகள் அனைத்துமே அரசியல் கட்சிகளாலும் சில சிவில் அமைப்புகளாலும் தொடக்கப்பட்டு கைவிடப்பட்டநிலை காணப்பட்டது.

இதனால் அந்தச் சூழலையும் இன்று இருக்க கூடிய சூழலையும் கருத்தில்கொண்டு ஒரு வரைபை தயார் செய்து அந்த வரைபினுடைய உள்ளடக்கம் அனைத்தையும் சிவில் அமைப்புகளுடன் உரையாடி அதில் என்ன என்ன விடயங்களை இணைத்துக் கொள்ளுதல், அதனுடைய முக்கியத்துவம் என்ன என்பதைப்பற்றி சிவில் அமைப்புகளின் காத்திரமான பங்கு இந்த வரைபில் உள்ளடக்க வேண்டும் என்ற நோக்கோடு வடக்கு கிழக்கு சார்ந்த சிவில் அமைப்புகளுடன் இரு தினங்களும் சந்தித்து உரையாடியுள்ளோம்.

இந்த உரையாடலில் வடக்கிலும் கிழக்கிலும் உள்ள சிவில் அமைப்புகள் அதிகமான விடயங்களை தெரிவித்துள்ளதுடன் எதிர்காலத்தில் உள்ளடக்கங்களை வலிமைப்படுத்துவதற்கும் ஆரோக்கியமான உரையாடலை செய்துள்ளனர்.

எனவே இந்த வரைபு ஈழத் தமிழர்களுடைய அரசியல் சார்ந்திருக்க கூடிய தீர்வாக அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகள், புலம்பெயர்ந்த அமைப்புகள் அனைவருக்கும் இடையிலான பொதுவான ஓர் அங்கீகரிக்கப்பட்ட ஒரே தீர்வாக இந்த விடயத்தை முதன்மைப்படுத்துவதற்கான நோக்கமாகக் கொண்டு இந்த மக்கள் சிந்தனை மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2001ஆம் ஆண்டில் இருந்து மக்கள் சிந்தனை மையம் அரசியல்கட்சிகள் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் உரையாடி இந்த வரைபை வரைந்துவிட்டு அந்த வரைபை மக்கள் மற்றும் சிவில் அமைப்புகளிடம் தெளிவையும் உண்மை தன்மையையும் வலியுறுத்திவிட்டு மீண்டும் அரசியல் கட்சிகள், புலம்பெயர்ந்த அமைப்புகள் இந்த விடயம் தொடர்பாக உரையாடி ஒரு இறுதி முடிவை எடுத்த பிற்பாடு ஊடகங்கள்மூலம் அதனை அறிவிப்போம் என திட்டமிட்டுள்ளோம்.

இந்த வரைபினுடைய உள்ளடக்கம் ஏற்கனவே முன்வைக்கப்பட்டிருக்கின்ற அல்லது இலங்கையினுடைய அரசியல் அமைப்பில் பொருத்தப்பாடு உடையது என கருதப்படக் கூடியதை உள்ளடக்கி இந்த வரைபை முதன்மைபடுத்தியுள்ளது. கூட்டாட்சியும் கூட்டு சமஷ்டிக்குரியது 13 சார்ந்தும் உரையாடப்படுகின்றதுடன் இவை எல்லாவற்றையும் ஈழத் தமிழர்களின் ஒரே வரைவாக முதன்மைபடுத்தும் நோக்கோடு வரையப்படும்.

இதன் ஊடாக ஈழத் தமிழர்களின் அரசியல் பிரச்சினைக்கான தீர்வை இந்த வரைவு உள்ளடக்க வேண்டும் என செயற்படுகின்றோம். இந்த தீர்வு வடிவமாக்கப்பட்ட பிற்பாடு எல்லா தரப்பும் அங்கீகரிக்கப்பட்ட வகையில் இந்த உரையாடல்களை செய்யவேண்டிய தேவைப்பாடு எழுந்துள்ளது என்று தெரிவித்தார்.

## இலங்கையில்...

எஸ். ஜெய்சங்கருக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் ஸ்டாலின் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தமிழ்நாட்டைச் சேர்ந்த 15 மீனவர்கள் IND-TN-10-MM-677 மற்றும் IND-TN-10-MM-913 பதிவு எண்கள் கொண்ட படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற நிலையில், கடந்த 09ஆம் திகதி இலங்கைக் கடற்படையினரால் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதோடு, அவர்களது மீன்பிடிப் படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இச்சம்பவம் தமிழ்நாட்டிலுள்ள மீனவ சமூகத்தினிடையே மன உளைச்சலையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்திய - இலங்கைக் கடல் எல்லையை ஒட்டிய பகுதிகளில் மீன்பிடித் தொழிலை நம்பியே பல்லாயிரக்கணக்கான மீனவர்களின் வாழ்வாதாரம் அடங்கியுள்ளதை ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் நன்கு அறிவார்.

தங்களது குடும்பத்தையும் சமூகத்தையும் பராமரிக்க மீனவர்கள் மீன்பிடித் தொழிலை மட்டுமே நம்பியுள்ளனர். அவர்கள், துரதிர்ஷ்டவசமாக, இலங்கைக் கடற்படையினரால் இதுபோன்று கைது செய்யப்படும் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்ந்து வருவது மீனவர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் ஆழ்ந்த வேதனையிலும் நிச்சயமற்ற தன்மையிலும் ஆழ்த்தியுள்ளது.

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள எமது மீனவர்களை உடனடியாக விடுவிக்கவும்,பறிமுதல் செய்யப்பட்ட அனைத்து மீன்பிடிப் படகுகளையும் திரும்ப ஒப்படைக்கவும் ஒன்றிய அரசு, இலங்கை அதிகாரிகளுடன் தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

தற்போது இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் சுமுகமான நட்புறவு பேணப்பட்டுவரும் நிலையில், தூதரக நடவடிக்கைகள் மூலமாகத்தான் மீனவர்களின் உரிமைகள் மற்றும் வாழ்வாதாரங்களைப் பாதுகாத்திடவும் சுமுகத் தீர்வினை எய்திடவும் இயலும்.

இதுதொடர்பாக ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சிலிருந்து சாதகமான பதிலை எதிர்பார்க்கிறேன்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

## சுகாதார...

தேசிய வைத்தியசாலையின் பணிகளில் பாதிப்பு ஏற்படும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

இந்நிலையில், கொழும்பு தேசிய வைத்தியசாலை உள்ளிட்ட நாடு பூராகவுமுள்ள அரச வைத்தியசாலைகளில் இருக்கும் CT, PET, MRI மற்றும் Engiogram ஆகிய இயந்திரங்களில் அநேகமானவை செயலிழந்துள்ளதாக கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்களின் சங்கத்தின் தலைவர் சானக்க தர்மவிக்ரம தெரிவித்தார்.

மருத்துவ உபகரணங்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டினால் மருத்துவ ஊழியர்களுக்கு ஏற்பட்டுள்ள நோய் நிலைமை, வைத்தியசாலைகளிலுள்ள குறைபாடுகள் என்பவற்றுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்குமாறு கோரி நாளை (12) கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தொழிற்சங்க நடவடிக்கையொன்றை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாக நிறைவுக்காண் மருத்துவ தொழில்வல்லுனர்கள் ஒன்றியத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (10) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இவர்கள் இதனைக் குறிப்பிட்டார்கள்.

சானக்க தர்மவிக்ரம தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

நாடு முழுவதுமுள்ள 44 CT இயந்திரங்களில் 12 செயலிழந்துள்ளன. புற்றுநோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக பயன்படுத்தப்படும் 10 இயந்திரங்கள் எமது வைத்தியசாலை கட்டமைப்புகளில் இருக்கின்றன. கடந்த நவம்பர் மாதம் 14ஆம் திகதியிலிருந்து, அவற்றில் கண்டி வைத்தியசாலையிலுள்ள இரு இயந்திரங்கள் செயலிழந்துள்ளன.

அபேக்ஷா வைத்தியசாலையிலுள்ள ஐந்து இயந்திரங்களில் ஒரு இயந்திரம் கடந்த மாதம் 22ஆம் திகதி முதல் செயலிழந்துள்ளது. இந்த இயந்திரங்கள் செயலிழந்ததை தொடர்ந்து சிறுவர்களுக்கான சிகிச்சை நடவடிக்கைகள் தடைப்பட்டுள்ளன.

இதற்கான நிதியை முறையாக செலுத்துவதில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. சேவை உடன்படிக்கைகளின் கட்டணங்கள் இரண்டு மடங்குகளாக அதிகரித்துள்ளன. எனவே, இந்த இயந்திரங்களை விரைவாக மறுசீரமைப்பு செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வைத்தியசாலைகளில் இருக்கும் 44 CT இயந்திரங்களில் 12 இயந்திரங்களும் 13 MRI இயந்திரங்களில் இரண்டும் 14 Angiogram இயந்திரங்களில் இரண்டும் 04 PET இயந்திரங்களில் இரண்டும் செயலிழந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

வைத்தியர் ரவி குமுதேஷ் கருத்து தெரிவிக்கையில்,

தேசிய வைத்தியசாலையின் இரசாயன ஆய்வுக்கூடத்துக்கு பொறுப்பாகவுள்ள ஒருசில வைத்தியர்கள் தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்கியுள்ளார்கள். இதனால், 300 இலட்சம் வரையிலாக பரிசோதனைகள் தடைப்பட்டுள்ளன. இந்த விடயங்கள் தொடர்பில் சுகாதார அமைச்சு எவ்வித கவனமும் செலுத்தவில்லை.

அதன் பிரகாரம், இரசாயன ஆய்வுக்கூட சேவைப்பிரிவில் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்க நேர்ந்துள்ளது. வைத்தியசாலை இரசாயன ஆய்வுக்கூட சேவை கட்டமைப்பை எடுத்துக்கொண்டால், மருத்துவ ஆய்வு நிறுவனத்தின் செயற்பாடுகள் வீழ்ச்சியை சந்தித்துள்ளன. பெரும்பாலான பரிசோதனை நடவடிக்கைள் தடைப்பட்டுள்ளன.

எனவே, இயந்திர கட்டமைப்பின் செயற்பாட்டிலுள்ள முகாமைத்துவமின்மை, அதற்கான சேவை விநியோகத்தை முறையாக முகாமைத்துவம் செய்யாமை, தேவையற்ற முறையில் உபகரணங்களை இறக்குமதி செய்தல், இருப்பிலுள்ள உபகரணங்களை முறையாக பயன்படுத்தாமை உள்ளிட்ட செயற்பாடுகளினால் இடம்பெறும் பண வீண் விரயத்தினால் வைத்தியசாலை கட்டமைப்பு பெரும் வீழ்ச்சியை சந்தித்துள்ளது. மறுபுறம் மருந்துகளிலும் பெரும் குறைபாடுகள் காணப்படுகின்றன என்று சுட்டிக்காட்டினார்.

## அம்பன்பொல...

மத்திய மகா வித்தியாலயத்துக்கு அருகில் நேற்று (10) காலை இடம்பெற்ற பஸ் விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் 29 பேர் காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சாரதிக்கு ஏற்பட்ட நித்திரை காரணமாக இந்த விபத்து நேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதும், உண்மையில் நித்திரையினால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதா அல்லது வேறு காரணங்கள் தாக்கம் செலுத்தியுள்ளனவா என்பது தொடர்பில் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிவருவதாவது,

அம்பன்பொல மகா வித்தியாலயத்துக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கொள்கலன் வாகனத்தின் பின்னால் பஸ் மோதுண்டதால் இந்த விபத்து நேர்ந்துள்ளது. அநுராதபுரம் பிரதேசத்தை நோக்கி பயணிக்கும் திசையிலேயே இந்த கொள்கலன் வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. வழிபாட்டுக்காக சிலரை அழைத்துக்கொண்டு தலாவ பிரதேசத்தை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த பஸ்ஸே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த விபத்தில் 29 பேர் காயங்களுக்குள்ளாகியுள்ளதுடன் அவர்கள் கல்கமுவ மற்றும் அம்பன்பொல வைத்தியசாலைகளில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

அவர்களில் மூவர் அநுராதபுரம் வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்த விபத்திலும் 32 மற்றும் 71 வயதுடைய இருவர் உயிரிழந்துள்ளனர். காயங்களுக்கானவர்களில் 06 பெண்களும் ஆணொருவரும் அம்பன்பொல வைத்தியசாலையிலும் மேலும் பெண்கள் 18 பேரும் ஆண்கள் நால்வரும் கல்கமுவ வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த பஸ்ஸை செலுத்திய சாரதிக்கு நித்திரை ஏற்பட்டுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. இந்த காரணத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன. கொள்கலன் வாகனம் வீதியின் ஒதுக்குப்புறமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாகவே தெரிவிக்கப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

மேலும், நித்திரையினால் இந்த விபத்து நேர்ந்துள்ளதாக சாரதி குறிப்பிட்டாலும் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் நித்திரை ஏற்படும் பட்சத்தில் சிறிது நேரம் ஓய்வு எடுத்துவிட்டு வாகனம் செலுத்துவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## இந்திய இழுவைப்..

ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவ்வமைப்புகளின் பிரதிநிதிகள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், அண்மையில் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூட்டம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றபோது அதில் பேசப்பட்ட விடயங்களை ஊடகங்கள் வாயிலாக அறிந்து கொண்டோம்.

அதில் குறிப்பிடும்போது 13ஆவது திருத்தச் சட்டம், தமிழரின் இனப் பிரச்சினை மற்றும் முல்லைத்தீவு புதைகுழி விவகாரம் தொடர்பில் பேசப்பட்டது.

நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்குச் செல்ல உள்ள நிலையில் 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் இந்தியப் பிரதமருக்கு தமிழ்க் கட்சிகள் கடிதம் ஒன்றை அனுப்பவுள்ளதாக தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்திருந்தார்.

மீனவ சங்கங்களாகிய நாம் ஒன்றை கேட்க விரும்புகிறோம். இந்திய எல்லை தாண்டிய மீன்பிடி தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் நிலையில் எமது மீனவர்கள் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வருகின்றார்கள்.

இவ்வாறான நிலையில் எமது மீனவர் பிரச்சினை மற்றும் எல்லை தாண்டிய இந்தியா இழுவைப் படகுகளை தடை செய்வது தொடர்பில் இந்தியப் பிரதமருக்கு எந்தவிதமான கடிதங்களும் அனுப்புவதாகத் தெரியவில்லை.

தமிழ்க் கட்சிகளிடம் நாம் ஒன்றைக் கேட்க விரும்புகிறோம், எமது மீனவ சமூகம் தொடர்ச்சியாக இந்திய இழுவைப்படகுகளால் பாதிக்கப்பட்டு வருகின்றது.

இந்திய இழுவைப் படகுகளை கடற்படை கைது செய்துவரும் நிலையில், அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதுடன் தொடர்ச்சியாக எல்லை தாண்டிய இந்திய ரோலர்களை கைது செய்ய வேண்டும்.

இந்நிலையில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சட்டவிரோத எல்லை தாண்டிய இந்திய ரோலர்களை கைது செய்வதற்கான அழுத்தங்களை தொடர்ச்சியாக இலங்கை கடற்படைக்கு வழங்க வேண்டும் என்றார். குறித்த ஊடக சந்திப்பில் யாழ். மாவட்ட கடை தொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளன உப தலைவர் அந்தோனிப் பிள்ளை பிரான்சிஸ் ரட்ண குமார் மற்றும் வடமராட்சி வடக்கு கடை தொழிலாளர் கூட்டுறவு சமாசத்தின் தலைவர் செல்லத்துரை நற்குணம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மன்னார் தலைமையக பொலிஸ் நிலையத்தில் உடற்தகுதி பரிசீலனை



மன்னார் நகர் நிருபர்

மன்னார் தலைமையகப் பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த உடற்தகுதி பரிசோதனை மற்றும் அணிவகுப்பு மரியாதை என்பன நேற்று திங்கட்கிழமை (10) காலை 6.30 மணியளவில் மன்னார் பொலிஸ் விளையாட்டு மைதானத்தில் மன்னார் தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சி.பி.ஜெயதிலக்க தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது மன்னார் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.வை.ஏ.எஸ். சந்திரபால பரிசீலனைகளை மேற்கொண்டதோடு, பொலிஸ் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

இதனை தொடர்ந்து மன்னார் நகரின் ஊடாக பொலிஸ் அணிவகுப்பு மரியாதை இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## ஒரு இலட்சம் வேலைவாய்ப்புத் திட்டம்: மன்னாரில் நால்வருக்கு நிரந்தர நியமனம்



மன்னார் நகர் நிருபர்

ஒரு இலட்சம் வேலை வாய்ப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 04 பேருக்கு நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்று திங்கட்கிழமை (10) காலை இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மேல் குறித்த நியமனக் கடிதங்களை வழங்கி வைத்தார்.

இதன்போது உதவி மாவட்ட செயலாளர் உட்பட செயலக அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் இதன்போது கருத்துத் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் ஒரு இலட்சம் வேலைவாய்ப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் ஊடாக நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு மன்னார் மாவட்டத்தில் தகுதியான 234 பேரின் விவரங்களை அனுப்பி வைத்திருந்தோம்.

இவர்களுள் 42 பேர் மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

குறித்த 42 பேரில் இறுதியாக 45 வயதுக்கு கீழ்ப்பட்ட 04 பேரும் 45 வயதுக்கு மேற்பட்ட ஒருவர் உள்ளடங்கலாக 05 பேர் தெரிவு செய்யப் பட்டனர்.

மேலும் 02 சாரதிகளும் தெரிவு செய்யப்பட்டுள் ளனர். அவர்கள் மூவரின் விபரங்களும் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வு காணப்பட்டபோதும் குறைந்த சம்பளத்தில் உங்கள் பணியை முன்னெடுத்திருந்தீர்கள். தொடர்ந்து சவால்களுக்கு முகம்கொடுத்து பணியாற்றி வந்தமையினால் உங்களுக்கு நிரந்தர நியமனம் கிடைத்துள்ளது. தற்போது நீங்கள் அரச பணிக்குள் இணைந்துள்ளீர்கள். மக்கள் சேவையை மனதில் நிறுத்தி மக்களுக்கு சிறந்த சேவையை முன்னெடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

## எழுபது வயதுடைய கணக்காளர் கடத்தல்



யாழ்ப்பாணம், நல்லூர் பகுதியைச் சேர்ந்த எழுபது வயதுடைய கணக்காளரை பெண் ஒருவர் உள்ளிட்ட குழுவினர் கடத்திச் சென்றதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கணக்காளருக்குச் சொந்தமான காணி விற்பனைக்கு இருப்பதை அறிந்த பெண் உள்ளிட்ட குழுவினர் வேனில் வந்து அவரை கடத்தியதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

மேலும் இந்தக் குழுவை வழிநடத்தியதாகக் கூறப்படும் பெண்ணை அடையாளம் கண்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெண் மற்றும் குழுவினரை கைது செய்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## விபத்துகளைத் தடுப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளாமை கவலையளிக்கிறது

### மன்னம்பிட்டி விபத்துக்கு ஹக்கீம் எம்.பி. அனுதாபம்

மன்னம்பிட்டி, கொட்டலீய பாலத்தில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் தனிப்பட்ட முறையிலும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டில் அண்மைக்காலமாக நாளுக்கு நாள் பல்வேறு குற்றச்செயல்கள் அதிகரித்துவரும் நிலையில், வீதி விபத்துகளும் கூடிக்கொண்டே போகின்றன.

கதுறுவெலையிலிருந்து நேற்றுமுன்தினமிரவு பயணிகளை ஏற்றிச் சென்ற தனியார் பஸ், மன்னம்பிட்டி, கொட்டலீய பாலத்திலிருந்து ஆற்றில் விழுந்ததனால் ஏற்பட்ட மரணங்கள் மக்கள் மத்தியில் பரவலான அதிர்வலைகளைத் தோற்றுவித்துள்ளன. அத்துடன், இந்தச் சம்பவத்தில் பலர் படுகாயமடைந்துமுள்ளனர்.

இந்தப் பாலம் அமைந்துள்ள இடத்தில் முன்னரும் பல விபத்துகள் ஏற்பட்டு, மரணங்கள் சம்பவித்திருந்தபோதிலும் கூட, இவ்வாறான பாரிய விபத்துகளைத் தடுப்ப தற்கான முயற்சிகளை அரசாங்கம் இதுவரையில் உரிய முறையில் மேற்கொள்ளாதது பலத்த கண்டனத்துக்குரியது.



அத்துடன், அதிகமான பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு, வேகக் கட்டுப்பாட்டை இழந்து வாகனங்களைச் செலுத்திச் செல்லும் சாரதிகளும் இவற்றுக்குப் பொறுப்புக் கூற வேண்டும்.

பெரும்பாலும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த, குறிப்பாக அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த பயணிகள் பலர் இந்த விபத்தில் உயிரிழந்தும் காயமுற்றுமுள்ளனர்.

அவர்களுக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு, மரணித்த மற்றும் காயமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் தனிப்பட்ட முறையிலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கத்திக்குத்து தாக்குதல்: குடும்பஸ்தர் உயிரிழப்பு

### பிரான்பற்றில் சம்பவம்

இளவாலை, பிரான்பற்று முருகன் கோவிலுக்கு அருகாமையில் இடம்பெற்ற கத்திக்குத்து தாக்குதலில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக இளவாலை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12.30 மணியளவில் உறவினர்கள் மூவருக்கிடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இதன்போது இருவர் இணைந்து சம்பவத்தில் உயிரிழந்தவர் மீது கத்திக்குத்து தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

பண்டத்தரிப்பு - பிரான்பற்று பகுதியைச் சேர்ந்த ராமச்சந்திரன் ராஜ்குமார் (வயது 35) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே மேற்படி சம்பவத்தில் உயிரிழந்துள்ளவராவார்.

இச்சம்பவம் குறித்து இருவரை இளவாலை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர்.

## பேக்கரி உற்பத்திகளின் விலைகள் குறையவில்லை நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

மாத்தளை நிருபர்

சமையல் எரிவாயு, கோதுமை மா மற்றும் பேக்கரி உற்பத்தி பொருட்களின் விலைகளை அரசு குறைத்துள்ளபோதிலும் பேக்கரி உற்பத்திகளின் விலைகள் இன்னும் குறையவில்லை என பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் 160 தொடக்கம் 170 ரூபாவரை விற்பனை செய்யப்பட்டு வந்த 450 கிராம் எடையுள்ள பாண், தற்பொழுது சமையல் எரிவாயு, கோதுமை மா மற்றும் ஏனைய மூலப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்ட போதும் தரம் குறைவாகவும் நிறை குறைவாகவும் 140 தொடக்கம் 150 ரூபாவரை விற்பனை செய்யப்படுவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, நுகர்வோரை சுரண்டும் நடவடிக்கையை கட்டுப்படுத்த நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் ஆனி மாதம் 26ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**மேஷம்:** உங்கள் உடல் இன்று ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும். புகழ் செல்வாக்கு அதிகரிக்கும்.

**ரிஷபம்:** கணவன்-மனைவி இடையே கருத்து வேறுபாடு ஏற்படலாம். உணவு, உறக்கம் தடைபடும் நாள்.

**மிதுனம்:** அரசாங்க வகையில் பல சலுகைகள் நீங்கள் கேட்காமலேயே கிடைக்கும். மூத்தவர்களின் ஆலோசனைகளை ஏற்பீர்கள்.

**கடகம்:** தொழில்-வியாபாரத்தில் அதிக இலாபங்களை அடைவீர்கள். நீங்கள் விரும்பிய தொழில் மாற்றம் அமையும்.

**சிம்மம்:** ஆலய தரிசனத்தால் மன நிறைவு அடைவீர்கள். தான தர்மங்களால் புண்ணியம் சேர்ப்பீர்கள்.

**கன்னி:** கடவுள் உங்கள் பொறுமையை சோதிக்கும் நாள். மனதைக் கெடுத்துக் கொள்ளாது அமைதியாக இருங்கள்.

**துலாம்:** எதிர்ப்பாராத வகையில் உங்கள் புகழ், அந்தஸ்து உயரப் போகின்றது. அரச வகையில் இலாபம் உண்டு.

**விருச்சிகம்:** கலங்கிப்போயிருந்த மனம் ஆறுதல் அடையப் போகின்றது. இன்றைய நாள் உங்களுடையது நல்லதையே நினையுங்கள்.

**தனுசு:** அரச உயர் அதிகாரிகளை வீணே பகைத்துக் கொள்ளாதீர்கள். ஆழம் அறியாது காலை விடாதீர்கள்.

**மகரம்:** உண்மையான உறவு என்ன என்பதை கற்றுக் கொள்ளப் போகின்றீர்கள். முயற்சிகள் எடுத்தாலும் தடைகள் உண்டு.

**கும்பம்:** மற்றவர்கள் முடியாது என்று கைவிட்ட செயலை இலகுவில் முடித்துக் காட்டுவீர்கள். நண்பர்கள் உதவுவார்கள்.

**மீனம்:** குடும்பத்துக்கான செலவுகளை இன்று நீங்கள் பொறுப்பேற்பீர்கள். குதர்க்க வாத விவாதங்களை தவிருங்கள்.

| | |
|---|---|
| **திதி** | :நவமி பி.ப.6.05 வரை பின் பரணி (தேய்) |
| **நட்சத்திரம்** | :அஸ்வினி பி.ப. 7.04 வரை பின் பரணி |
| **யோகம்** | :அமிர்தசித்த யோகம் பி.ப 7.04 வரை பின் மரண யோகம் |
| **வார சூலை** | :வடக்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது |
| **நல்லநேரம்** | :மு.ப. 7.57– 8.57 மணிவரை |
| **ராகுகாலம்** | :2.57 – 4.27 மணிவரை |
| **எமகண்டம்** | :8.57–10.27 மணிவரை |
| **குளிகை** | :11.57– 1.27 மணிவரை |
| **சந்திராஷ்டமம்** | :கன்னி ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும் |
| **தன அதிர்ஷ்டம்** | : ஆயிலியம், கேட்டை, ரேவதி (பிறந்தவர்களுக்கு) |
| **விசேட தினம்** | : ------- |

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

## கலபட தோட்டத்தில் பாலம் திறப்பு





தலவாக்கலை நிருபர்

இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் நிதி அனுசரணையில் நாவலப்பிட்டி கலபட தோட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட பாலம் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

இத்தோட்டத்தில் வாழும் மக்கள், பாடசாலை மாணவர்கள், அன்றாடம் தொழிலுக்குச் செல்வோர் அனைவரும் நாள்தோறும் தோட்டத்தின் மத்திய பகுதியில் அமைந்துள்ள ஆற்றைக் கடந்தே பயணங்களை மேற்கொள்வது வழக்கமாகும். இந்நிலையில் மழைக்காலங்களின்போது குறித்த ஆறு பெருக்கெடுப்பதால் இப்பகுதி மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். இந்நிலையில் இப்பிரதேச மக்களின் நலன்கருதி இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் நிதி அனுசரணையில் பாலம் நிர்மாணிக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

## பள்ளிவாசல் நிர்வாகிகளை தெரிவுசெய்ய அறிவுறுத்தல்

### முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அறிவிப்பு

பதவிக்காலம் நிறைவடைந்துள்ள பதிவுசெய்யப்பட்ட அனைத்து பள்ளிவாசல்களிலும் நிர்வாகிகளை தெரிவு செய்யுமாறு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இதன் பிரகாரம் நாட்டிலுள்ள பதிவு செய்யப்பட்ட அனைத்து பள்ளிவாசல்கள், தக்கியாக்கள் மற்றும் சாவியாக்கள் என்பவற்றில் புதிய நிர்வாகிகளை தெரிவு செய்வதற்கான பொதுக் கூட்டங்களை வக்பு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமையவும் கடந்தகால நிர்வாகத் தெரிவு நடைமுறைகளைப் பின்பற்றியும் மேற்கொள்ளுமாறும் இது தொடர்பான முன்னேற்பாடுகள் பற்றி முன்கூட்டியே திணைக்களத்துக்கு அறிவிக்குமாறும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளரினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, நடைபெறவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காரணமாக பள்ளிவாசல்களின் புதிய நிர்வாகிகள் தெரிவை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு ஏற்கனவே திணைக்களத்தினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மறவன்புலவு சச்சிதானந்தத்துக்கு 'தமிழினக் காவலன்' சிறப்புப் பட்டம்



சாவகச்சேரி நிருபர்

சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தத்துக்கு உலக சைவப் பேரவையினால் 'தமிழினக் காவலன்' என்ற சிறப்புப் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் செல்வா நகரில் கடந்த சனிக்கிழமை(08)இடம்பெற்ற கௌரவிப்பு நிகழ்வின் போது சச்சிதானந்தத்துக்கு, இந்திய ஆதீனங்களால் ஆசிர்வதிக்கப்பட்டு, இந்து ஆலயங்கள் பலவற்றிலும் வழிபாட்டுக்கு வைக்கப்பட்ட செங்கோலும் வழங்கி கௌரவிக்கப் பட்டது. இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளிலும் சைவ சமயத்துக் பெரும் தொண்டாற்றி வருகின்றமை, மத மாற்றத்துக்கு எதிராக செயற்பட்டு வருகின்றமை உள்ளிட்ட காரணங்களுக்காக மன்னார் மக்கள் மற்றும் உலக சைவப் பேரவை ஆகியன மறவன்புலவு சச்சிதானந்தத்தை கௌரவித்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

## டிக்கோயா ஆலயத்தில் கொள்ளைச் சம்பவம்

எம். கிருஷ்ணா

ஹட்டன், பொகவந்தலாவை பிரதான வீதியில் அமைந்துள்ள டிக்கோயா வனராஜா விநாயகர் ஆலயத்தில் கொள்ளைச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று (10) அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

ஆலயத்தின் முற்பகுதியில் உள்ள கதவை உடைத்து உண்டியலை எடுத்து அதில் உள்ள பணத்தை எடுத்து விட்டு, மீண்டும் உண்டியலை குறித்த இடத்திலேயே வைத்துச் கதவை பூட்டி விட்டு சந்தேக நபர் சென்றுள்ளதாக கண்காணிப்புக் கெமரா மூலம் தெரியவந்துள்ளது.

ஆலய நிர்வாகத்தினர் அதிகாலை வேலை கோயிலை திறக்க முற்பட்ட போதே இச்சம்பவம் தொடர்பில் ஹட்டன் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். இதனையடுத்து ஆலயத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

**வெற்றி நிச்சயம்**



"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, படிப்பில் மந்தம், எதிரித்தொல்லை, தீராதநோய், செய்வினை கோளாறு, போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, வெளிநாடு செல்ல/விசா கிடைக்க, கொடுத்த பணம் திரும்பி வர, விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, மனங்கவர்ந்தவரை வசமாக்கிக் கொள்ள, தகாத உறவை பிரிக்க, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 72 மணித்தியாலத்திற்குள் 100% நிரந்தரத் தீர்வு. இது நான் வணங்கும் அந்த ஆதிசிவன் மீது தேவ சத்தியம்.

உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி. ஸ்ரீமத் சுவாமிஜி +94 710192687 (Whatsapp)www.facebook.com/Srimath Suwamiji/

**வெளிவந்துவிட்டது!**

**தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை விசேட மாதிரி வினாத்தாள் தொகுப்பு**




விலை ரூ.850/= மட்டுமே
பாடசாலைகளுக்கு விசேட விலைக்கழிவு!

பிரதிகளை பெற்றுக்கொள்ள அழையுங்கள்

0761393805 / 0741684643
0777983308

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023, ஜூலை 11ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வு தரவேண்டும் டக்ளஸ்!

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறல்களில் ஈடுபடுவது தமிழக கடற்றொழிலாளர்களே அன்றி, இலங்கை கடற்படையினர் அல்ல என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கை கடற்றொழிலாளர்களுக்கு பாதிப்புகளை ஏற்படுத்தும் இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்கள் தொடர்பாக வடக்கு - கிழக்கின் சக பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழக தலைவர்களுக்கும் மக்களுக்கும் தெளிவுபடுத்த முன்வர வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

நெடுந்தீவு கடற்பரப்பினுள் அத்துமீறி எல்லை தாண்டி சட்டவிரோத தொழில் முறையான இழுவைமடித் தொழிலை மேற்கொண்டிருந்த நிலையில், 15 தமிழக கடற்றொழிலாளர்களும் இரண்டு மீன்பிடிப் படகுகளுடன் நேற்று முன்தினம் அதிகாலை இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக தமிழக ஊடகங்களில் வெளியாகி வருகின்ற செய்திகள் தொடர்பாக கவனம் செலுத்தியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கைக் கடற்படையினர் அத்துமீறல்களில் ஈடுபடுவதாக தமிழக ஊடகங்களில் வெளிவருகின்ற செய்திகள் தவறானவை எனவும், இலங்கைத் தமிழ் கடற்றொழிலாளர்களின் வற்புறுத்தல்கள் காரணமாகவே எல்லை தாண்டி வருகின்ற இந்திய கடற்றொழிலாளர்கள் கைதுசெய்ப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும், குறித்த கடற்றொழிலாளர் விவகாரம் தொடர்பாக தெளிவுபடுத்த வேண்டிய தார்மீக கடமையை வடக்கு - கிழக்கின் சக பாராளுமன்ற உறுப்பினர்கள் உடனடியாக முன்னெடுக்க வேண்டும் எனவும், தமிழக கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை இந்திய மத்திய - மாநில அரசுகள் விரைந்து மேற்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் குறித்து, ஜனாதிபதி ரணிலுடன் அடுத்த வாரம் இந்தியா செல்லவிருக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பகிரங்கமாகவே தெரிவித்திருப்பது வரவேற்கத்தக்க விடயம். பாதிக்கப்படும் இலங்கை மீனவர்கள் தொடர்பில் மீன்வளத்துறை அமைச்சர் என்ற ரீதியில் அமைச்சர் டக்ளஸ் பேசியாகவேண்டிய கட்டாயமும் இருக்கிறது. எல்லாவற்றுக்கும் மேல் இந்திய மீனவர்களின் வருகையால் வெகுவாக பாதிக்கப்படுவது வடக்கு மாகாண மீனவர்கள்தான்.

தரையில் எல்லைகளை வகுப்பது போல கடலில் எல்லைகளையோ வரம்புகளையோ வகுக்க முடியாது என்ற காரணத்தை மட்டும் வைத்துக்கொண்டு இந்திய மீனவர்கள் இலங்கைக் கடலுக்குள் மேற்கொள்ளும் அத்துமீறல்களை ஜனாதிபதியுடனான இந்திய பயணத்தில் இணையும் அமைச்சர் டக்ளஸ் இந்திய அரசின் மேல்மட்டத்திடம் சுட்டிக்காட்ட வேண்டும். அதுமட்டுமல்லாமல் தமிழக அரசின் உயர்மட்ட தலைவர்களின் கவனத்திற்கும் இந்த விடயத்தைக் கொண்டுவர ஆவன செய்யவேண்டும்.

இலங்கையிலிருந்து தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களை குறிப்பாக வடக்கு - கிழக்கிலுள்ள எம்.பிக்களைக் கொண்ட அணியொன்றை தமிழகம் அழைத்துச் சென்று அங்குள்ள அரச பிரதிதிகளுடன் மீனவர்கள் பிரச்சினை குறித்துப் பேசுவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னெடுப்பொன்றை செய்வதாக அரசியல் உயர்மட்ட வட்டாரங்களில் இருந்து அறியக் கூடியதாக இருக்கிறது. ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின் பின்னர் அப்படியான பயணமொன்றை அமைச்சர் டக்ளஸ் முன்னெடுப்பாராயின் மீனவர் பிரச்சினை தீர அதுவும் உதவியாக இருக்கும்.

மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவற்றுக்கான தீர்வு என்ன? இந்திய தரப்பினூடாக இவற்றை சாதிக்கலாம் என்ற விடயங்களில் சிந்தனை கொண்டவர் என்ற ரீதியில் அமைச்சர் டக்ளஸ் தனது அமைச்சுப் பதவிக்காலத்தில் தீர்வொன்றை மீனவர்களுக்கு பெற்றுக்கொடுக்க வேண்டும். அமைச்சரவையில் இருக்கும் சிரேஷ்ட தமிழ் அமைச்சர் என்ற ரீதியில் அவரின் முயற்சிகளுக்கு இலங்கை அரசின் - ஜனாதிபதியின் முழு ஒத்துழைப்பும் அதற்கு கிடைக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

வெள்ளிநிலாவே விளக்காய் எரியும் கடல்தான் மீனவர்களின் வீடு. அந்த வீட்டுக்கு அவர்கள் நிம்மதியாக சென்று திரும்ப வழியை, நிரந்தர நிம்மதியை ஏற்படுத்திக் கொடுக்க அமைச்சர் டக்ளஸ் மேற்கொள்ள வேண்டுமென மீனவர்கள் சார்பில் கோரிக்கை விடுக்கின்றோம்.

## இன்றைய நாளில்...

- 1735 – நெப்டியூனின் சுற்றுவட்டத்தினுள் குறுங்கோளான புளூட்டோ, இந்நாளில் வந்ததாகக் கணிப்புகள் தெரிவித்தன. இது பின்னர் 1979இல் மீண்டும் நிகழ்ந்தது.
- 1801 – பிரெஞ்சு வானியலாளர் சான் பொன்ஸ், தனது முதலாவது வால்வெள்ளிக் கண்டுபிடிப்பை அறிவித்தார். அடுத்த 27 ஆண்டுகளில் இவர் மேலும் 36 வால்வெள்ளிகளைக் கண்டுபிடித்தமை குறிப்பிடத்தக்கது.
- 1811 – வளிமங்களின் மூலக்கூறுகள் பற்றிய தமது குறிப்புகளை இத்தாலிய அறிவியலாளர் அவகாதரோ வெளியிட்டார்.
- 1893 – ஜப்பானைச் சேர்ந்த கொக்கிச்சி மிக்கிமோட்டோ, செயற்கையாக முத்துகளை வளர்க்கும் முறையொன்றை முதன்முறையாக அறிமுகப்படுத்தினார்.
- 1979 – அமெரிக்காவின் முதலாவது விண்வெளி நிலையமான ஸ்கைலேப், இந்தியப் பெருங்கடலில் வீழ்ந்து அழிந்தது.
- 1982 – இத்தாலி மேற்கு ஜேர்மனியை 3-1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து கால்பந்து உலகக்கிண்ணத்தை வென்றது.
- 1990 – கொக்காவில் இராணுவ முகாம் விடுதலைப் புலிகளினால் தகர்க்கப்பட்டது.
- 1991 – ஹஜ் பயணிகளை ஏற்றிச் சென்ற நைஜீரிய விமானம் சவூதி அரேபியாவின் ஜித்தாவில் விபத்துக்குள்ளானதில் 261 பேர் உயிரிழந்தனர்.
- 2007 – குடும்பிமலை புலிகளின் முகாம் வீழ்ச்சியடைந்தது.




# கச்சதீவுப் பிரச்சினை; தீர்வுக்குச் சரியான தருணம்!

எஸ்.செம்மலை

இந்திய மீனவர்கள், குறிப்பாக தமிழ்நாட்டு மீனவர்கள் ஆழ்கடல் சென்று மீன் பிடித்து, கச்சதீவைச் சொந்தம் கொண்டாடிய பாரம்பரிய உரிமை தற்போது இல்லை. இந்தியா - இலங்கை இடையே 1974 மற்றும் 1976ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில் அந்த உரிமை மறுக்கப்படுகிறது. கச்சதீவு தற்போது இலங்கைக்குச் சொந்தமானதாகக் கருதப்படுகிறது. சமஸ்தானங்கள் இணைக்கப்பட்டபோது இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்த கச்சதீவு, இன்றைக்கு இந்தியாவின் கட்டுப்பாட்டில் இல்லை. போடப்பட்ட ஒப்பந்தம் செல்லுமா என்கிற கேள்விக்கும் இன்றுவரை விடையில்லை.

சட்டம் சொல்வது என்ன? இந்தியாவுக்கும் வங்கதேசத்துக்கும் இடையே ஏற்பட்ட, குறிப்பிட்ட நிலப்பரப்புப் பரிவர்த்தனை தொடர்பான பிரச்சினையில் உச்ச நீதிமன்றம் 1960இல் 'பெருபாரி' வழக்கில் (Berubari Union case) ஒரு தீர்ப்பை அளித்தது. ''ஒரு நாட்டின் எந்த ஒரு பகுதியையும் இன்னொரு நாட்டுக்கு விட்டுக் கொடுக்கும்போது, அற்கான உடன்பாடு, சம்பந்தப்பட்ட இரண்டு நாடுகளின் பாராளுமன்றங்களில் ஒப்புதல் பெறப்பட்டு, மேற்படி இரண்டு நாடுகளும் அவற்றைப் பரிமாற்றம் செய்துகொண்டால் மட்டுமே அந்த ஒப்பந்தம் செல்லும்'' என்பதுதான் அந்தத் தீர்ப்பு.

இவ்வளவு தெளிவாகத் தீர்ப்பு இருக்கும் நிலையில், இந்தியா கச்சதீவை இலங்கைக்கு தாரைவார்த்த விவகாரத்தில், இன்று வரை பாராளுமன்றங்களின் ஒப்புதல் மற்றும் சட்டப்படியான பரிவர்த்தனை இல்லாதபோது, 1974 மற்றும் 1976ஆம் ஆண்டுகளின் ஒப்பந்தங்கள் செல்லாது என்பதுதான் இந்தியாவின் நிலைப்பாடு.

1974இல் இரு நாட்டுப் பிரதமர்கள் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தில் இரு நாட்டு மீனவர்களும், இரு நாட்டுக் கடற்பகுதிகளிலும் மீன் பிடிக்கும் பாரம்பரிய உரிமையைத் தொடர்ந்து அனுபவிக்கலாம் என்று சொல்லப்பட்டது. கச்சதீவு சார்ந்த கடல் பகுதியில் இந்திய மீனவர்கள் வலைகளை உலர்த்தவும் ஓய்வெடுக்கவும் அந்தோனியார் கோயிலில் நடைபெறும் திருவிழாவில் பங்கேற்று வழிபாடு செய்யவும் உரிமைகள் உறுதிசெய்யப்பட்ட நிலையில், 1976இல் இரு நாட்டு அரசுச் செயலாளர்கள் இடையே போடப்பட்ட ஒப்பந்தத்தில் அந்த உரிமைகள் நீக்கப்பட்டதன் காரணம் என்னவென்று புரியவில்லை.

இரு நாட்டுப் பிரதமர்களால் போடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில், அரசுச் செயலாளர்களால் மாற்றம் செய்ய முடியுமா? அதுவும் எல்லைக் கோட்டை மாற்றம் செய்யும் அளவுக்கு அவர்களுக்கு அதிகாரம் உண்டா?

### அ.தி.மு.க. அரசின் முயற்சிகள்

1991இல் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற ஜெ.ஜெயலலிதா, இது குறித்து உரிய நடவடிக்கை எடுத்தார். சட்டமன்றத்தில் கச்சதீவைத் திரும்பப் பெற மத்திய அரசை வலியுறுத்தித் தீர்மானம் கொண்டுவந்தார். மத்திய அரசு அதற்குச் செவிசாய்க்காத நிலையில், தமிழ்நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்திற்கொண்டு, எதிர்க்கட்சியாக இருந்தபோதே உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

பின்னர் மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடன், வருவாய்த்துறையை வழக்கில் இணைத்தும், சட்டப் போராட்டம் நடத்திவந்தார். அவரது மறைவுக்குப் பிறகு முதல்வரான எடப்பாடி பழனிச்சாமி, அந்த வழக்கில் Implead Petition தாக்கல் செய்து, வழக்கைத் தொடர்ந்து நடத்த வழிவகை செய்தார். வழக்கு தற்போதும் நிலுவையில் இருக்கிறது.

### வாய்ப்புண்டா?

இதில் இன்னொரு கேள்வியும் எழுகிறது. சட்டப்படியான நடவடிக்கைகள் பின்பற்றப்படாததால் இந்த ஒப்பந்தங்கள் செல்லாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தாலும், அந்தத் தீர்ப்பு இலங்கை அரசைக் கட்டுப்படுத்துமா? இரு நாடுகளுக்குமான இந்தப் பிரச்சினையை சர்வதேச நீதிமன்றத்துக்கு எடுத்துச் சென்றால் என்ன முடிவு ஏற்படும்? வியன்னா ஒப்பந்தம் (Vienna Convention on the Law of Treaties 1969), கத்தார்-பஹ்ரைன் (Qatar - Bahrain) கடல் எல்லை மறுவரையறை வழக்கில் சர்வதேச நீதிமன்றம் (International Court of Justice) வழங்கிய தீர்ப்புகளின்படி பாராளுமன்ற ஒப்புதல் தேவையில்லை.

எனவே, இந்திய - இலங்கை ஒப்பந்தம் செல்லாது என்று சொல்வதற்கான வாய்ப்பு குறைவுதான். சர்வதேச நீதிமன்றத்தில் கச்சதீவின் உரிமை யாருக்கு என்று முடிவு செய்யப்பட்டாலும் கூட, நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறை என்ன என்பதிலும் தெளிவில்லை. இந்த விடயத்தில் இந்திய மத்திய அரசு அமைதி காப்பதும், இலங்கைக்கு சாதகமாகவே இருக்கிறது.

### புதிய உடன்பாடு அவசியம்

கடற்பகுதியில், நீதிமன்ற அதிகார எல்லையை வரையறுக்கிறபோது, இந்தியாவுக்கு 24 கடல் மைல் (Nautical miles) தூரத்துக்குக் கடல் பகுதியில் உரிமை கொண்டாட கடல்சார் சட்டம் (Maritime Zones Act) வழிவகுக்கிறது. அப்படியிருக்கும்போது, 18 கடல் மைல் தொலைவில் உள்ள கச்சதீவின் மீதுள்ள இந்தியாவின் உரிமை உறுதியாகிறது. இருந்தாலும், இரு நாடுகளின் பாதுகாப்பு, இரு நாட்டு மீனவர்களின் நலன் கருதியும், இரண்டு நாடுகளுக்கும் இடையே ஒரு புதிய உடன்பாடு ஏற்படுவது அவசியம்.

இலங்கை ஒரு நட்பு நாடு என்றே இந்தியா நினைக்கிறது. நட்பு நாட்டோடு நல்லுறவு கொள்வதற்கு இத்தகைய முயற்சி மேலும் வலுசேர்க்கும். வழக்கு நிலுவையில் இருந்தாலும், மத்திய அரசும் சாத்தியமான மாற்று வழிமுறைகளை நன்றாக ஆராய்ந்து, ஆக்கபூர்வமான நடவடிக்கைகளைத் தொடங்கினால் நிச்சயமாகப் பலன் கிடைக்கும்.

### சரியான தருணம்

இலங்கையில் தற்போது நிலவிவரும் பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக, மனிதாபிமான அடிப்படையில் இந்தியா நிதியுதவி, பொருளுதவி ஆகியவற்றைக் கடனாகவும், மானியமாகவும் வழங்கிவருகிறது. ஏற்கெனவே, சீனாவின் பிடியில் சிக்கியுள்ள இலங்கை, அந்நாட்டிடம் வாங்கிய கடனுக்காக அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை 99 ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு விட்டுள்ளதை முன்னுதாரணமாகக் கொண்டு, தாரைவார்க்கப்பட்ட கச்சதீவை மீட்டெடுக்கும் முயற்சியின் தொடர் நடவடிக்கைகளை ஜெயலலிதா எடுத்தார்.

09.06.2011இல் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அரசினர் தனித் தீர்மானத்தில் கண்டுள்ளபடியும், 16.09.2004இல் பிரதமரைச் சந்தித்தபோது அவரிடம் வைக்கப்பட்ட கோரிக்கையான நிரந்தரக் குத்தகை (Lease in Perpetuity) அடிப்படையிலும், தமிழ்நாட்டு மீனவர்கள் கச்சதீவு பகுதிக்குச் சென்று மீன் பிடிக்கும் பாரம்பரிய உரிமையைத் தொடரவும் கச்சதீவின் அனுபவ உரிமையை மீட்டெடுக்கும் வகையிலும், நீண்ட காலக் குத்தகை என்ற அடிப்படையில் அத்தீவை இந்திய மத்திய அரசு பெற்றுத் தர வேண்டும்.

### செய்ய வேண்டியவை

இந்திய மத்திய - மாநில அரசுகளுக்கும் மிக முக்கியமான இரண்டு கடமைகள் இருக்கின்றன. முதலாவதாக, ஜெயலலிதா அரசு உச்ச நீதிமன்றதில் தாக்கல் செய்து, தற்போது நிலுவையில் இருந்துவரும் வழக்கை விரைவுபடுத்தி, நமக்குச் சாதகமான தீர்ப்பைப் பெற சட்டரீதியான நடவடிக்கையைத் துரிதப்படுத்த வேண்டும். அடுத்து, அப்படியான தீர்வு கிடைக்கக் காலதாமதம் ஆகலாம் என்கிற நிலையில், இடைக்கால நிர்வாக ஏற்பாடாகக் கச்சதீவை நீண்ட காலக் குத்தகைக்கு இலங்கை அரசிடமிருந்து பெற்றுத்தர வெளியுறவுத்துறை ரீதியான முயற்சியை விரைந்து எடுக்க வேண்டும்.

உடனடித் தீர்வாகக் கச்சதீவை நிரந்தர குத்தகைக்கு எடுக்க வலியுறுத்தி ஜெயலலிதா தீர்க்கதரிசனமாக அன்று சொன்ன கருத்து, இன்றைக்கு விவாதப் பொருளாக மாறியிருப்பது நல்ல சமிக்ஞை.

திருகோணமலையைப் போல, கச்சதீவும் இந்தியாவின் நாட்டின் பாதுகாப்புக்குக் கவசம் போன்றது. வீட்டின் முன்பக்கக் கதவைப் பூட்டிவிட்டு, பின்புற புழக்கடைக் கதவு திறந்த நிலையில், வீடு பாதுகாப்பாகத்தான் இருக்கிறது என்று எண்ணாமல், வெளிநாட்டு அச்சுறுத்தலையும் நாட்டின் பாதுகாப்பையும் கருத்திற்கொண்டு, வடக்கு எல்லையில் மட்டுமல்லாமல் தெற்கு எல்லையிலும் இந்திய மத்திய அரசு கவனம் செலுத்த வேண்டும்.

(நன்றி - தமிழ் இந்து)

## நக்கல் நமசிவாயம்

போராட்டம் செய்யுற ஆட்களை இப்படிக் கட்டுப்படுத்தவேண்டும் அப்படிக் கட்டுப்படுத்தவேண்டும் என்று சொல்லுற ரணில் ஐயா, அந்த நேரத்தில கோட்டாபயவுக்கு அந்த ஐடியாவை சொல்லியிருக்கலாமே..? சொல்லியிருந்தா ஜனாதிபதி ஆகியிருக்க முடியாது தானே என்னங்கோ..!



# அஸ்வெசும திட்டத்தில் பெருந்தோட்ட மக்களை உள்வாங்குவதில் உதாசீனம்

## அரச ஊழியர்கள் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் பிரதமரிடம் முறைப்பாடு



அரசாங்கத்தால் அமுல்படுத்தப்பட்டுள்ள அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுத் திட்டத்தில் மலையகப் பெருந்தோட்ட மக்களை உள்வாங்குவதில் அரச ஊழியர்கள் உதாசீனப் போக்கைக் கடைப்பிடித்து வருவதாக இராஜாங்க அமைச்சர் அருணாசலம் அரவிந்தகுமார் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவைச் சந்தித்து முறையிட்டுள்ளதுடன் இவ்விடயத்தில் உடனடியாகத் தலையீடு செய்யுமாறும் பாதிக்கப் பட்ட மலையக பெருந்தோட்ட மக்கள் தொடர்பில் கவனஞ்செலுத்துமாறும் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவை அவரது அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்து அஸ்வெசும நலன்புரிக் கொடுப்பனவுத் திட்டத்தில் மலையகப் பெருந்தோட்ட மக்கள் தொடர்பில் மேற்கொள்ளப் பட்டுவரும் உதாசீனப்போக்கு தொடர்பில் முறையிட்டதாக இராஜாங்க அமைச்சரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது குறித்து இராஜாங்க அமைச்சர் அருணாசலம் அரவிந்தகுமார் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மிகவும் குறைந்த வருமானத்தை ஈட்டுகின்ற தரப்பினராக மலையகப் பெருந்தோட்ட மக்கள் அடையாளப்படுத்தப்படுகின்றனர். ஆகையால் அஸ்வெசும நலன்புரிக் கொடுப்பனவுத் திட்டத்தில் பயனடைவதற்கான அனைத்து உரிமைகளும் அவர்களுக்கு உண்டு என்பதையும் மலையகப் பெருந்தோட்ட மக்களை இத்திட்டத்தில் உள்வாங்கும் நடைமுறைச் செயற்பாட்டில் அரச ஊழியர்கள் உதாசீனப்போக்கைக் கடைப் பிடித்து வருகின்றமை மற்றும் எமது மக்கள் புறக்கணிக்கப்படுகின்றமை தொடர்பில் தொடர்ச்சியாகக் கிடைத்துவரும் முறைப்பாடுகள் சம்பந்தமாகவும் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவை பாராளுமன்றத்தில் சந்தித்து முறையிட்டு எடுத்துரைத்தேன்.

அஸ்வெசும நலன்புரிக் கொடுப்பனவுத் திட்டத்தில் உள்வாங்கப்படுவதற்கு சகல தகுதிகளும் மலையக மக்களுக்கு உண்டு என்பதை அழுத்தமாக வலியுறுத்தினேன்.

இதன் நியாயத்தன்மையைப் புரிந்துகொண்ட பிரதமர் தினேஷ் குணவர்த்தன, இவ்விடயம் தொடர்பில் புதிய சுற்றறிக்கையை சகல பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பிவைப்பதாகக் குறிப்பிட்டார்.

அத்துடன், தோட்டப் புறங்களில் சேவையாற்றும் நலன்புரி உத்தியோகத்தர்களையும் இணைத்துக்கொண்டு அஸ்வெசும திட்டத்தை முன்னெடுப்பதற்கும் இணக்கம் தெரிவித்ததாகவும் கூறினார்.

# குண்டசாலை விவேகானந்தா தமிழ் வித்தியாலயத்தில் 'ஸ்மாட்' வகுப்பறை





இக்பால் அலி

ஐயமிட்டுன் தொண்டு நிறுவனத்தின் அனுசரணையில் குண்டசாலை விவேகானந்தா தமிழ் வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட டிஜிட்டல் தொழில்நுட்ப ஸ்மாட் வகுப்பறை திறப்பு விழாவும் எட்டு மாத காலத்துக்கான பகல் உணவு வழங்கும் அங்குரார்ப்பண நிகழ்வும் அதிபர் எஸ்.சிவஞானசுந்தரம் தலைமையில் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட ஐயமிட்டுன் தொண்டு நிறுவனத்தின் ஸ்தாபகத் தலைவர் சமூகஜோதி ஞானதீபம் செல்வராசா முரளிதரன் ஸ்மாட் வகுப்பறையை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மத்திய மாகாண சபையின் முன்னாள் தவிசாளர் துரை மதியுகராஜா, கலாபூசணம் முத்து சம்மந்தர், ஆசிரிய ஆலோசகர் அலெக்சாண்டர், நீலா ஊர் பிரமுகர் மற்றும் பழைய மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# தேயிலைத் தொழிற்றுறையை மேம்படுத்த சிவில் சமூக நிறுவனங்கள் பங்களிக்க வேண்டும்

## பிரிடோ நிறுவனத்தின் துணை இயக்குநர் தெரிவிப்பு







இக்பால் அலி

தேயிலைத் தொழிற்றுறையை மேம்படுத்த சிவில் சமூக நிறுவனங்கள் ஒன்றிணைந்து பங்களிப்பு நல்கவேண்டுமென்று பெருந்தோட்டத் துறையின் பிரிடோ நிறுவனத்தின் துணை இயக்குநர் எஸ். கே. சந்திரசேகரம் தெரிவித்தார்.

மலையகத் தமிழ் மக்களுக்கு சமூகப் பணியாற்றுவதற்கு சமூக சேவை நிறுவனங்களுக்கிடையில் பலமான வலைப்பின்னல் அமைப்புத் தேவை என்ற தொனிப்பொருளில் "ஜேசுவிட்டு" நல்லிணக்க ஒருமைப்பாட்டு அமைப்பினால் நடத்தப்பட்ட பயிற்சி முகாம், அமைப்பின் ஒருங்கிணைப்பாளரும் இலங்கை முன்னணி ஆங்கில,தமிழ் நாவலாசிரியரும் கவிஞரும் சமூக சிந்தனையாளரும் அருட்பணியாளருமான யே. ச. பெனி தலைமையில் கண்டி சத்தியோதய மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஹட்டன் சி. எஸ். சி. நிறுவன இயக்குநர் பிரேம்குமார், சத்தோதய இயக்குநர் வண. பிதா கமால் உள்ளிட்ட பல சிவில் சமூக அமைப்பினர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவிப்பு





மலையக மக்கள் கடந்த 200 வருடங்களாக முகங்கொடுத்து வரும் பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும். இந்தப் பிரச்சினைகளுக்கு தனித்து செயற்பட முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

மலையக மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் தெனியாய மற்றும் இரத்தினபுரி பகுதிகளில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற நடமாடும் மக்கள் சேவையில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நடமாடும் சேவையில் ஜனாதிபதியின் பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்க மற்றும் மேற்குறிப்பிட்ட பிரதேசங்களைச் சேர்ந்த தொழில் திணைக்கள உத்தியோகஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,அஸ்வெசும வேலைத்திட்டத்தில் தகுதியற்றவர்கள் இணைக்கப் பட்டு தகுதியானவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள். மலையகப் பாடசாலைகளுக்கு காணிகள் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். காணிப் பிரச்சினைகள், இனவாதப் புறக்கணிப்புகள், நலன்புரிக் கொடுப்பனவு வழங்கப்படாமை, தோட்ட நிர்வாகங்களில் தனிச்சையான ஆதிக்க நிர்வாகம் இவை அனைத்துக்கும் தீர்வு பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

நாமே எமது மக்களுக்கு பாதுகாப்பு அரணாக செயற்பட வேண்டும். ஊவா மாகாணம் மத்திய மாகாணத்தைத் தொடர்ந்து இப்போது தென் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளோம். நாம் அனைவரும் ஒன்றிணைந்த கரமாக ஓர் அணியில் நின்று செயற்பட்டால் நம் பிரச்சினைகள் அனைத்துக்கும் வெகு விரைவில் தீர்வு பெற்றுக்கொள்ள முடியும் என்பதில் இரு வேறு கருத்துகள் கிடையாது எனவும் தெரிவித்தார்.







வவுனியா வர்த்தக சங்கத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா பலத்த இராணுவப் பாதுகாப்புக்கு மத்தியில் நேற்றுமுன்தினம் (09) இடம்பெற்றது. இந்நிகழ்வில் இராணுவத்தின் வன்னி கட்டளைத் தளபதி பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு கட்டடத்தை திறந்துவைத்தார்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (10.07.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 201.4213 | 214.0219 |
| கனேடியன் டொலர் | 226.7411 | 240.8398 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41.3565 | 44.5625 |
| யூரோ | 331.6056 | 350.0370 |
| ஜப்பான் யென் | 2.1241 | 2.2376 |
| சிங்கப்பூர் டொலர் | 224.0447 | 237.1465 |
| ஸ்ரேலிங் பவுன் | 388.3071 | 408.9209 |
| சுவிஸ் பிரான்ங் | 338.2148 | 360.1219 |
| ஐ.அ. டொலர் | 304.0216 | 318.2388 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 826.2999 |
| குவைட் | குவைட் தினார் | 1,015.0108 |
| ஓமான் | ஓமான் றியால் | 809.1401 |
| கட்டார் | கட்டார் றியால் | 85.4802 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 83.0342 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 84.8122 |



றோயல் கல்லூரி எடெக்ஸ் அமைப்பு, வாசிகசாலை வாசகர் சங்கம் மற்றும் தமிழ் இலக்கிய மன்றம் ஆகியன இணைந்து ஒரு தொகுதி நூல்களை மாங்குளம் மகா வித்தியாலயத்துக்கு வழங்கின. இது தொடர்பாக இடம்பெற்ற நிகழ்வில் எடெக்ஸ் அமைப்பின் தலைவர் மஹிந்த கலகெதரவிடமிருந்து 573 படையணிப் பிரிவின் கோர்ணல் மஞ்சு துனுசிங்க நூல்களைப் பெற்றுக் கொண்டார். திட்ட தொடர்பாளர் திருமதி நந்தகுமார், தமிழ் இலக்கிய மன்றத் தலைவர் சர ஹான் ஸ்ரீதரன், திருமதி றகீஹா, செயற்றிட்டப் பணிப்பாளர்கள் ரஸீக கலப்பதி, துலஞ்சன விக்கிரமசிங்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

**படப்பிடிப்பு:** *எம்.நசார்*

# காரைநகர் -ஊர்காவற்றுறை படகுப் பாதை சேவை ஆரம்பம்



நீண்டகாலமாக இடம்பெறாதிருந்த காரைநகர் - ஊர்காவற்றுறை படகுப் பாதைச் சேவை நேற்று திங்கட்கிழமை முதல் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் - ஊர்காவற்றுறை இடையிலான கடல் பாதை சேவை அடிக்கடி செயலிழப்பதால் மேற்குறித்த இரு கிராமங்களுக்கும் போக்குவரத்தை மேற்கொள்ளும் பொதுமக்கள், அரச உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள் பெரும் சிரமங்களுக்கு முகம்கொடுத்து வந்தனர்.

கடல் பாதை மூலம் சுமார் 05 நிமிடத்தில் செல்லவேண்டிய பயணத்தை தரை வழியாகச் சென்றால் சுமார் 45 கிலோ மீற்றர் தூரம் பயணிக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

ஞாயிற்றுக்கிழமை 2023.07.09

உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம்: 5170
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 20,620,724.00
ஆங்கில எழுத்து: L
வெற்றி இலக்கங்கள்: 1 4 8 5 9 8

**கொவிசெத**
சீட்டிழுப்பு இலக்கம்: 3412
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 68,821,457.20
ஆங்கில எழுத்து: F
வெற்றி இலக்கங்கள்: 08 16 34 36

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம்: 1200
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 98,866,508.00
ஆங்கில எழுத்து: L
வெற்றி இலக்கங்கள்: 07 28 70 77
விசேட எழுத்து: L

**ராசி சுப பலன்** Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 479
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 2,954,473.80
வெற்றி இலக்கினம்: விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள்: 16 22 27 31
விசேட இலக்கினம்: விருச்சிகம்

**Mega POWER**
சீட்டிழுப்பு இலக்கம்: 1518
அடுத்த மெகா சுப்பர் பரிசு: ரூ. 400,475,072.00
ஆங்கில எழுத்து: U
சுப்பர் இலக்கம்: 09
வெற்றி இலக்கங்கள்: 07 21 25 41
அடுத்த பவர் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00

# நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் மீதான விமானத் தாக்குதலின் 28ஆம் ஆண்டு நினைவுதினம் அனுஷ்டிப்பு





யாழ். நிருபர்

யாழ்ப்பாணம், நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் மீதான விமானத் தாக்குதலின் 28ஆம் ஆண்டு நினைவுதினம் நேற்று முன்தினம் (09) ஞாயிற்றுக்கிழமை மாலை சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் நினைவுகூரப்பட்டது.

சென். பீற்றர்ஸ் தேவாலயத்தின் பங்குத்தந்தை தலைமையில் வழிபாடுகள் நடைபெற்று உயிரிழந்தவர்களின் உறவினர்கள், பொதுமக்கள் மலர் தூபி சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

கடந்த 1995 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 09 திகதியன்று நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்திலும் நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலயத்திலும் இடம்பெயர்ந்து தங்கியிருந்த மக்கள் மீது விமானப்படையினரின் மூன்று விமானங்கள் தொடர்ச்சியாக 13 குண்டுகளை வீசியதில் 147 பேர் பலியாகினர்.

அன்று அதிகாலை வலிகாமம் பிரதேசங்களை நோக்கி எறிகணைத் தாக்குதல், விமானத் தாக்குதல்களின் உதவியுடன் இராணுவத்தினர் முன்னேறிப்பாய்தல் எனும் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர்.

தொடர் எறிகணைத் தாக்குதல்களால் தமது வாழ்விடங்களை விட்டு நவாலியை நோக்கி இடம்பெயர்ந்த மக்கள் நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்திலும் நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலயத்திலும் தஞ்சமடைந்தனர்.

அன்றைய தினம் காலை திடீரென வந்த மூன்று விமானங்கள் தொடர்ச்சியாக 13 குண்டுகளை மக்கள் தஞ்சமடைந்திருந்த தேவாலயம் மற்றும் ஆலயம் மீது வீசின.



இக்குண்டுவீச்சுச் சம்பவத்தில் குழந்தைகள், பெண்கள் உட்பட 147 பேர் அந்த இடத்திலேயே உடல் சிதறி பலியாகியிருந்தனர். 350க்கும் மேற்பட்டோர் காயமடைந்திருந்தனர்.

# மலையகம் 200 நிகழ்வும் நூல் வெளியீடும்





வவுனியா நிருபர்

வவுனியாவில் மலையகம் 200 மற்றும் மலையக மக்களின் 200 வருட வரலாற்று நூல் வெளியீடும் நேற்று முன்தினம் (09) வவுனியா பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றன.

இந்தியாவிலிருந்து மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 200 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ள நிலையில், குறித்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் இரா.சுப்பிரமணியத்தின் மலையக மக்கள் 200 ஆண்டு வரலாறு என்ற நூலும் வெளியிடப்பட்டது.

முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் எம்.பி.நடராஜா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், உப தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் வீ. இராதாகிருஷ்ணன், வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கு. திலீபன் உட்படப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

வடக்கு செய்திகள் thamilannorth@gmail.com

# தனியார் கல்வி நிலையம் பற்றிய தீர்மானத்தில் எந்த மாற்றமும் இல்லை

யாழ். நிருபர்

''யாழ்ப்பாண மாவட்டத்தில் தனியார் கல்வி நிலையம் பற்றிய தீர்மானத்தில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. இது தொடர்பாக வேறெந்த அமைப்புகளும் என்னுடன் பேச்சுவார்த்தை நடத்தவில்லை'' - என யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

தனியார் கல்வி நிறுவனங்களை ஞாயிற்றுக்கிழமை இயக்குவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டு மாவட்ட செயலாளருடன் கலந்துரையாடப் பட்டதாகத் தகவல்கள் வெளியான நிலையில், அதனை மறுத்து கருத்து தெரிவிக்கும்போதே மாவட்ட செயலாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தனியார் கல்வி நிறுவனங்களை ஞாயிற்றுக்கிழமை இயக்குவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டு மாவட்ட செயலாளருடன் கலந்துரையாடப் பட்டதாகக் கூறப்படுவதில் எவ்வித உண்மையும் இல்லை. எந்த அமைப்பும் என்னுடன் இது தொடர்பில் கலந்துரையாடல் மேற் கொள்ளவில்லை. தனியார் கல்வி நிலையம் பற்றிய தீர்மானத்தில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை - என்றார்.

## கைதடி சித்த போதனா வைத்தியசாலையின் பொன்விழா




சாவகச்சேரி நிருபர்

யாழ்ப்பாணம்-கைதடி சித்த போதனா வைத்தியசாலையின் 50ஆவது வருட நிறைவை முன்னிட்ட பொன்விழா நிகழ்வுகள் அண்மையில் வைத்தியசாலையில் இடம்பெற்றிருந்தன.

வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் சியாமா துரைரட்ணம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், ஆயுர்வேத திணைக்கள உதவி ஆணையாளர் பி.அத்துல, சுகாதார அமைச்சின் அபிவிருத்திப் பிரிவுத் திட்டப் பணிப்பாளர் பொன்னையா தயானந்தா, ஆயுர்வேத திணைக்கள வடமாகாண உதவி ஆணையாளர் கனகேஸ்வரி ஜெபநாமகணேசன் உட்படப் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.



இதன்போது மூலிகைத் தோட்டம் திறந்துவைக்கப்பட்டதோடு அங்கு புதிய மூலிகைச் செடிகளும் நடப்பட்டன.

# ஊர்தியை தாடியில் கட்டியிழுத்து சாதனை




யாழ். நிருபர்

7 நிமிடங்கள் 48 செக்கன்களில் ஆயிரத்து 550 கிலோ கிராம் எடை கொண்ட ஊர்தியை 400 மீற்றர் தூரம் தாடியால் இழுத்து தென்மராட்சி மட்டுவிலைச் சேர்ந்த 59 வயதான செ.திருச்செல்வம் உலக சாதனை படைத்துள்ளார்.

சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் (09) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் தென்மராட்சி, மட்டுவில் பகுதியில் இடம்பெற்ற உலக சாதனை நிகழ்வில் முதன்மை விருந்தினராக தொழிலதிபர் அ.கிருபாகரன் கலந்து சாதனை நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக சமூக சேவகர் கலாநிதி அகிலன் முத்துக்குமாரசாமி, ஈ.சிற்றி ஆங்கில கல்லூரியைச் சேர்ந்த றஜீபன் ஆகியோரும், அதிதிகளாக சர்வதேச எம்.ஜி.ஆர். பேரவைத் தலைவர் ம.விஜயகாந்த், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் தி.தங்கவேலு, ஊடகவியலாளர் முகுந்தன், சாதனையாளரின் நண்பன் தையிட்டி இ.சிவானந்தம் ஆகியோரும், சோழன் உலக சாதனை புத்தக நிறுவன இலங்கை கிளைத் தலைவர் யோ.யூட் நிமலன், சந்திரபுரம் கிராம அலுவலர் சுபாசன் ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.



**தெரணியகலை பஸ் டிப்போவுக்கு பதிய பஸ்கள் வழங்கிவைக்கும் நிகழ்வு சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவின் திசாநாயக்க தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. தெரணியகலை தேர்தல் தொகுதியில் ஹிங்குரன, தலாவ, கிரிஹேன, மடவல, உட மாலிபொட, பேருவில்ல ஆகிய பகுதிகளுக்கு புதிய பஸ்கள் சேவையில் அமர்த்தப்படவுள்ளன.**

# உடப்புஸ்ஸல்லாவையில் நடமாடும் சேவை

ஆ.ரமேஸ்

வலப்பனை பிரதேச செயலகத் திற்குட்பட்ட உடப்புஸ்ஸல்லாவை பிரதேசத்தை உள்ளடக்கிய ஏழு கிராம சேவகர் பிரிவுகளிலும் வசிக்கும் மக்களின் நன்மை கருதி கடந்த வெள்ளிக்கிழமை (07) நடமாடும் சேவையொன்று முன்னெடுக்கப்பட்டது.

வலப்பனை பிரதேச செயலாளர் எஸ்.பி.லிந்தகும்பர தலைமையில் உடப்புஸ்ஸல்லாவை கே.டி.எஸ். மண்டபத்தில் இந்த நடமாடும் சேவை இடம்பெற்றது.

இதில் உடப்புஸ்ஸல்லாவை வடக்கு, கிழக்கு, சென்மாக்றட், சூரியக் காபத்தன இரு பிரிவுகள், கல் கடபத்தன மற்றும் டெல்மார் ஆகிய கிராம சேவகர் பிரிவுகளிலிருந்து ஆயிரத்திற்கும் அதிகமானோர் கலந்துகொண்டிருந்தனர்.

இந்த நடமாடும் சேவையில் ஒரேநாளில் பிறப்புச் சான்றிதழ், அஸ்வெசும மேன்முறையீடு மற்றும் விண்ணப்பம் ஏற்றல், காணிக்கச்சேரி மற்றும் காணிப் பிணக்குகளுக்குத் தீர்வுகள், தேசிய அடையாள அட்டை, பொலிஸ் சான்றிதழ், சமுர்த்தி பதிதல் உள்ளிட்ட பிரச்சினை களுக்கான தீர்வுகளும் அடங்கு கின்றன.

அத்துடன், பிள்ளைகள் பாதுகாப்பு, போதை ஒழிப்பு தொடர்பில் விழிப் புணர்வு, வெளிநாட்டு வேலை வாய்ப்பு தொடர்பில் விளக்கம், ஆயுர்வேத மருந்து வழங்கல் என பல விடயங்களில் பிரதேச மக்கள் வலப்பனை பிரதேச செயலகத்திற்குச் சென்று தீர்வுகாண முடியாத அரச சேவைகளை ஒரே இடத்தில் பெற்று பயன் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# மோட்டார் வாகனமொன்று பள்ளத்தில் வீழ்ந்து இரண்டு குழந்தைகள் உட்பட ஐவர் காயம்



கண்டி நிருபர்

கம்பளை, அம்புலுவாவ பிரதேசத்தில் மோட்டார் வாகனமொன்று பாதையை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்ததால் இரண்டு குழந்தை கள் உட்பட ஐவர் காயமடைந்துள்ளனர்.

கம்பளை-ஹெம்மாத்தகம பிரதான வீதியின் அம்புலுவாவ 3 ஆம் கட்டைப் பகுதியில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக ஹெம்மாத் தகம பொலிஸார் தெரிவித்தனர். சுமார் 100 அடி செங்குத்தான சரிவில் மோட்டார் வாகனம் விழுந்துள்ளது. காயமடைந்தவர்கள் ஹெம்மாத்தகம வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பெண்கள், இரண்டு ஆண்கள் மற்றும் இரண்டு சிறு பிள்ளைகள் மேற்படி வாகனத்தில் பயணித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித் தனர். உலப்பனை பிரதேசத்தைச் சேர்ந்த ஒரே குடும்ப அங்கத்தவர்கள் கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த வேளை யிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

மலையக செய்திகள் thamilanmalayagam@gmail.com




**நுவரெலியா, டயகம நகரில் புதிதாக மதுபானசாலை திறக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது. சிறுவர்கள் குழுவொன்றும் இவ்வார்ப்பாட்டத்தில் பங்குகொண்டமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. டயகம நகரில் ஏற்கனவே மூன்று மதுபானசாலைகள் உள்ள நிலையில், மற்றுமொரு புதிய மதுபானசாலை தேவையில்லை என அவர்கள் தெரிவித்தனர்.**

**படங்கள்:** கண்டி நிருபர்

# மேல் கொத்மலை நீர்த்தேக்கத்திலிருந்து வயோதிபப் பெண்ணின் சடலம் மீட்பு



தலவாக்கலை நிருபர்

மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் வயோதிபப் பெண்ணொருவரின் சடலம் மிதந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை (10) மீட்கப்பட்டதாகத் தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர். 60 வயதுக்கும் 65 வயதுக்கு மிடைப்பட்ட பெண்ணொருவரே உயிரை மாய்த்துக் கொள்ளும் நோக்கில் நீர்த்தேக்கத்தில் குதித்துள்ளதாகப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். உயிரிழந்த பெண்ணின் அடையாளம் இதுவரை காணப்படவில்லையெனவும் நுவரெலியா மாவட்ட நீதவானின் விசாரணையின் பின்னர் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டுசெல்ல நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்த தலவாக்கலை பொலிஸார், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பன்விலவில் 'பேஸ்புக்' விருந்து 112 பேருக்கு அழைப்பு

## பல்வேறு வகையான போதைப்பொருட்களுடன் 12 பேர் கைது

கண்டி நிருபர்

கண்டி, பன்வில பிரதேசத்தில் 'பேஸ்புக்' கழகத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட விருந்து பசாரத்தில் 112 பேர் கலந்துகொண்டிருந்த நிலையில், போதைப்பொருளைத் தம்வசம் வைத்திருந்த 12 பேர் கைதுசெய்யப் பட்டனர்.

பன்வில பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலொன்றின் அடிப்படையில் மேற்படி சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது. குறித்த விருந்துபசாரத்தில் 13 பெண்கள் உட்பட 112 பேர் கலந்துகொண்டுள்ளனர். இவர்களுள் போதைப்பொருளை சூட்சுமமாகத் தம்வசம் மறைத்து வைத்திருந்த 10 பேரும் விருந்துபசாரத்தை ஒழுங்கு செய்த இருவருமாக 12 பேர் போதைப் பொருட்களுடன் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடம் பல்வேறுவகை யான போதைப் பொருட்கள் இருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர்கள் அனைவரும் 21 முதல் 33 வயதிற்கு இடைப்பட்டவர்களாவர். இவர்கள் மாத்தறை, நாரம்மல, அம்பதென்ன, உக்குவல, கம்பளை, நுவரெலியா மற்றும் பேராதனை போன்ற இடங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கட்டுரைப்போட்டி

மறைந்த ஸ்ரீல.மு.கா.தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் நினைவாக பிரதேச பாடசாலைகளின் மாணவர்கள் மத்தியில் கட்டுரைப்போட்டி யொன்றை நடத்த உக்குவளை மாருகொன வாசிப்போர் ஒன்றியம் தீர்மானித்துள்ளது. எம்.எச்.எம்.அஷ்ரப் எனும் தலைப்பில் 900 சொற்களைக் கொண்டதாக எழுதப்படும் கட்டுரைகளில் ஐந்துவரி கொண்ட கவிதை களையும் உள்ளடக்கலாம்.

கட்டுரைகளை எழுதியனு ப்புவோர் தமது கலைத்துறை ஆர்வங்கள் (இருப்பின்) பற்றியும் ஒலிபரப்பு நிகழ்ச்சிகளில் பங்குபற்ற விரும்பின் அது பற்றியும் வேறாகக் குறிப்பிட்டு "திறமைக்கோர் களம்" வாசிப்போர் ஒன்றியம், இல 26/உ மாருகொன, உக்குவளை 21300 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

























கொழும்பு 14, கிராண்ட்பாஸ் கலைமகள் தமிழ் வித்தியாலயத்தின் 87ஆவது வருட பூர்த்தி விழா அதிபர் எம். முருகானந்தம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் வெகு விமரிசையாக இடம்பெற்றது. பாடசாலை அபிவிருத்தி சங்கச் செயலாளர் கணேசன், உறுப்பினர்கள், பாடசாலையின் பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் இடம்பெற்ற இவ்விழாவில் பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் கலந்துகொண்டார். முன்னாள் மாநகர சபை உறுப்பினர் சந்தமாலி, அயல் பாடசாலையின் அதிபர் கருணாநந்த, கலைமகள் வித்தியாலய முன்னாள் அதிபர் செல்வநாயகம், விபுலானந்தா பாடசாலையின் முன்னாள் அதிபர் சண்முகானந்தன் மற்றும் பாடசாலையின் முன்னாள் ஆசிரியர்களான ஸ்ரீகஜன், ராஜேந்திரன் ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்து கொண்டனர்.

**படப்பிடிப்பு:** எம். நசார்

















# கிழக்கு பல்கலையில் COOP Fresh விற்பனை நிலையம் திறப்பு





மட்டக்களப்பு

கிழக்கு பல்கலைக்கழகத்தின் பிள்ளையாரடியில் அமைந்துள்ள சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீட வளாகத்தில் COOP Fresh பல்பொருள் விற்பனை நிலையம் திங்கட்கிழமை(10) திறந்துவைக்கப்பட்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட மட்டக்களப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் நா.சசிகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான என்.சிவலிங்கம், கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வீ.கனகசிங்கம், பிரதி உபவேந்தர் பேராசிரியர் கே.ஈ.கருணாகரன், கிழக்கு பல்கலைக்கழகத்தின் சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீடத்தின் பீடாதிபதி கலாநிதி ரீ.சதானந்தன் ஆகியோரும் சிறப்பு அதிதிகளாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.வீ.தங்கவேல் மற்றும் கிழக்கு பல்கலைக்கழகத்தின் பதிவாளர் ஏ.பகீரதன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

# பாடசாலைகளுக்கிடையிலான சிறுவர் விளையாட்டு நிகழ்வு

கல்லடி செய்தியாளர்

மட்டக்களப்பு கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் ஏறாவூர்ப்பற்றுக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான சிறுவர் விளையாட்டு விழா ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், மட்டக்களப்பு கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி உமாபதி விவேகானந்தன், ஏறாவூர்ப்பற்றுக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் த.இராஜமோகன், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களான கு.சிவராசா, ஆ.பிரகாஷ், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது தரம் 3, 4, 5 ஐச் சேர்ந்த 22 அணிகள் போட்டிகளில் கலந்துகொண்டன.

இதில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் புனித ஜோசப் கல்லூரி



முதலிடத்தையும் ஐயங்கேணி தமிழ் மகாவித்தியாலயம் இரண்டாம் இடத்தையும் குடியிருப்பு கனிஷ்ட வித்தியாலயம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com



தோப்பூர் கமநலசேவை நிலையத்துக் குட்பட்ட முன்னம்போடிவெட்டை பிரதேசத்தில் சிவப்பு நிறத்தாளைக் கொண்ட புதிய வகை நெல்லினத்தை சிறுபோகத்துக்காக விவசாயிகள் பரீட்சார்த்தமாகப் பயிரிட்டுள்ளனர். பொதுவாக நெல்லினமானது பச்சைப் பசேலென காட்சியளிக்கும். இவை மாறாக செக்கச்செவேலென காட்சியளிப்பதை அவதானிக்க முடிகின்றது.

**படம்:** தோப்பூர்

# கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் கௌரவிப்பு




நிந்தவூர் செய்தியாளர்

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் பணியாற்றியவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் ஆசிரியர் சங்கக் கூட்டமும் சனிக்கிழமை(08) சேர் ராசிக் பரீட் மண்டபத்தில் கல்லூரி அதிபர் யூ.எல்.எம்.அமீன் தலைமையில் இடம்பெற்றன.

பத்து வருடத்துக்கும் மேற்பட்ட காலம் ஆசிரியை பணியைத் திறம்பட சேவையாற்றி இடமாற்றம் பெற்றுச்சென்ற ஆசிரியைகளான எம்.எப்.நிலாமியா (புவியியல் பாடம்), எம்.யூ.ஹாலிஷா பர்வின் (வரலாறு - குடியியற் கல்வி), எம்.எல்.பி.பாத்தும்மா (அரசியல் விஞ்ஞானம்) ஆகியோர்களுக்கு சேவை நலன் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் கல்வியியற்கல்லூரியில் இருந்து வெளியாகி புதிய நியமனம் பெற்று ஆசிரியர்களாக இணைந்து கொண்டவர்கள் அறிமுகம் செய்யும் நிகழ்வும் இதன்போது இடம்பெற்றன.

மேலும், பாடசாலையில் சுமார் ஐந்து வருடங்களாக கல்விசாரா ஊழியராக (விடுதி சமையல்) கடமையாற்றி ஓய்வுபெற்ற கே.சுகந்தியை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதி அதிபர்களான ஹாஜியானி சமதா மசூது லெவ்வை, ஏ.எச்.நதீரா, உதவி அதிபர்களான எம்.எஸ்.மனுனா, என்.டி.நதீகா, பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கல்விசார ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# ‘காணிக்கு குருநாதன்’ எனும் நூல் வெளியீடும் கௌரவிப்பும்




அம்பாறை மாவட்ட செய்தியாளர்

எம்.ஆர்.எம்.றஜாய் எழுதிய ‘காணிக்கு குருநாதன்’ எனும் நூல் வெளியீடும் கௌரவிப்பும் கிழக்கு மாகாண குடியேற்ற உத்தியோகத்தர் தொழிற்சங்கம் ஏற்பாட்டில் கல்முனை கிருஸ்டா இல்ல மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை(09) மாலை இடம்பெற்றன.

இந்நிகழ்வில், கதாநாயகன் முன்னாள் உதவி காணி ஆணையாளர் கே.குருநாதன் வாழ்த்தி கௌரவிக்கப்பட்டதுடன் பல்வேறு நிகழ்வுகளும் சிறப்பாக அரங்கேறின.

அம்பாறை மாவட்ட தலைமைப்பீட காணி உத்தியோகத்தர் கே.எம்.முஸம்மில் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

மேலும் இந்நிகழ்வில் கல்முனை, சாய்ந்தமருது, நிந்தவூர், சம்மாந்துறை, பொத்துவில், லாகுகல பிரதேச செயலாளர்கள் உட்பட கிழக்கு மாகாணப் பேரவை உதவிச் செயலாளர் எம்.சி.அன்சார் மற்றும் உறவினர்கள், நண்பர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு நூலின் பிரதிகளைப் பெற்றுக்கொண்டனர்.

# மாணவர்களுக்கு கழுத்துப்பட்டி வழங்கல்



நிந்தவூர் செய்தியாளர்

ஏறாவூர் அப்துல் காதர் வித்தியாலயத்தின் தேவைப்பாடாக இருந்த மாணவர்களுக்கான கழுத்துப்பட்டி தொடர்பில் அதிபரினால் ஐயங்கேணி முஸ்லிம் கிராம அபிவிருத்திச் சங்கத்திடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைவாக ஐயங்கேணி முஸ்லிம் கிராம அபிவிருத்திச்சங்க உத்தியோகத்தர் திருமதி சர்மிளா சரண்யனால் கழுத்துப்பட்டி உத்தியோகபூர்வமாக பாடசாலை அதிபரிடம் அண்மையில் கையளிக்கப்பட்டது.

ஏறாவூர் அப்துல் காதர் வித்தியாலய அதிபர் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பிரதம அதிதியாக ஏறாவூர் நகர பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சர்மிளா சரண்யன் கலந்து கொண்டதோடு, ஐயங்கேணி முஸ்லிம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர், பாடசாலை முன்னாள் அதிபர், ஆசிரியர்கள், ஏறாவூர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# கல்முனை ஸாஹிரா கல்லூரி பழைய மாணவர் சங்க சந்திப்பு



மாளிகைக்காடு செய்தியாளர்

கல்முனை கல்வி வலய, கல்முனை ஸாஹிரா கல்லூரி பழைய மாணவர் சங்க அலுவலக திறப்புவிழாவும் முகாமைத்துவ சபை சந்திப்பும் வெள்ளிக்கிழமை (07) கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றது.

அடுத்த ஆண்டு தனது 75ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடவுள்ள கல்முனை ஸாஹிராவின் பழைய மாணவர் சங்கத்தின் பாவனைக்காக அலுவலகம் ஒன்றைத் திறந்து வைக்கும் நிகழ்வும் பழைய மாணவர் சங்கத்துக்கு நடப்பாண்டுக்காக சட்ட ஆலோசகர், கணக்காய்வாளர் மற்றும் ஊடக இணைப்பாளர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்குதல், பாடசாலை முகாமைத்துவ சபையுடனான கலந்துரையாடல் என்பன பாடசாலை வளாகத்தில் பாடசாலை முதல்வரும் பழைய மாணவர் சங்கத்தின் தலைவருமான எம்.ஐ.ஜாபீர் தலைமையில் இடம்பெற்றன.

இதன்போது சட்ட ஆலோசகராக எம்.எஸ்.ஏ. சாரிக் காரியப்பர், கணக்காய்வாளர் ஏ.நிசாப்தீன் மற்றும் ஊடக இணைப்பாளர்களில் ஒருவரான எம்.வை.அமீர், எம்.ஐ.எம்.அஸ்ஹர் ஆகியோருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.



சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜெயந்த ரத்னாயகாவின் 37 வருட சேவையின் பின் ஓய்வு பெற்றுச் சென்றதை முன்னிட்டு சேவை நலன் பாராட்டு விழா அண்மையில் சம்மாந்துறை அல்-மர்ஜான் பாடசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வு சம்மாந்துறை பிரதேச செயலகம், பொலிஸ் நிலையம், பொது நலன் விரும்பிகள் போன்ற அமைப்புகளின் பங்களிப்புடன் மிகச் சிறப்பாக இடம்பெற்றது. இதில் அதிதிகளாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனிபா மற்றும் நீர்ப்பாசன பொறியியலாளர் எம்.நவாஸ், சம்மாந்துறை பொலிஸ் நிலைய அதிகாரி கே.டி.எஸ்.ஜெனகரத், சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி எம்.கே.அஸார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**படம்:** திராய்க்கேணி செய்தியாளர்

# லீனத் பாலர் பாடசாலை பட்டமளிப்பு விழா




அம்பாறை மாவட்ட செய்தியாளர்

கடந்த 18 வருட காலமாக கல்முனையில் இயங்கி வருகின்ற லீனத் பாலர் பாடசாலையின் பட்டமளிப்பு விழாவும் வருடாந்த நிகழ்வும் பாலர் பாடசாலையின் ஸ்தாபகரும் அதிபருமான எஸ்.தஸ்லி உம்மா தலைமையில் ஞாயிற்றுக்கிழமை(09) நடைபெற்றன.

இந்நிகழ்வின்போது பாலர் பாடசாலை சிறார்களின் சந்தைப் பொருட்கள் ‘சிறுவர் சந்தை’ எனும் தொனிப்பொருளில் விற்பனைக்காக பொதுமக்கள் பார்வைக்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளரும் கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் ஸ்தாபகருமான ரஹ்மத் மன்சூர், கௌரவ அதிதியாக கல்முனை அஸ்-ஸுஹறா



வித்தியாலய அதிபர் எம்.எச்.எஸ்.ஆர்.மஜீதியா ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

மேலும் பாலர் பாடசாலையின் ஆசிரியர்கள், பெற்றோர்கள், ஊர்மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பொது அறிவு வினா விடைச்சமர்





காத்தான்குடி செய்தியாளர்

சிவாநந்தியன் பட்டமுன் (Under Graduates) மாணவர் சங்கத்தினால் 15ஆவது முறையாக ஏற்பாடு செய்து நடத்தப்பட்ட சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த சவால் கிண்ண மாவட்ட மட்ட பொதுஅறிவு வினா விடைச்சமர் போட்டி ஞாயிற்றுக்கிழமை(09)இடம்பெற்றது.

மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற இவ் இறுதிப் போட்டியில் சுமார் 50க்கும் மேற்பட்ட பாடசாலைகள் கலந்துகொண்டதோடு இதில் தெரிவுசெய்யப்பட்ட 16 முன்னணி பாடசாலைகளிடையே நடத்தப்பட்ட போட்டி நிகழ்வுகளில் போட்டியிட்டு காத்தான்குடி மத்திய கல்லூரி மற்றும் வின்சன் மகளிர் கல்லூரி என்பன இறுதிப்போட்டிக்குத் தெரிவாகின.

இந்நிகழ்வில் ஆன்மீக அதிதியாக ஸ்ரீமத் சுவாமி நீலமாதவாநந்தா ஜீ மகராஜ் கலந்து கொண்டதோடு பிரதம அதிதியாக மாகாண கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம் கலந்துகொண்டார். மேலும் பல அதிதிகளோடு நடந்தேறிய இந்நிகழ்வின் இறுதிப் போட்டியில் மட்டக்களப்பு வின்சன் உயர்தர மகளிர் கல்லூரி மற்றும் காத்தான்குடி மத்திய கல்லூரி என்பன மோதின.

இறுதிச் சுற்றில் முதல்நிலை வகித்த வின்சன் உயர்தர மகளிர் கல்லூரி 265 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தையும் ஆண்கள் பாடசாலைகளில் முன்னணி வகித்த காத்தான்குடி மத்திய கல்லூரி 235 புள்ளிகளையும் பெற்று இரண்டாம் இடத்தையும் தனதாக்கிக் கொண்டன.

இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் மற்றும் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.



அம்பாறை மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபராக சிந்தக்க அபேவிக்ரம திங்கட்கிழமை(10) காலை தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார். அரச பணியில் பல உயர் பதவிகளை ஆற்றியுள்ள இவர், இதற்கு முன்னர் தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமாகக் கடமையாற்றியிருந்தார். இதன்போது மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன், அம்பாறை மாவட்ட பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலகத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

**படம்:** நாவிதன்வெளி செய்தியாளர்



2023 மூதூர் வலயமட்ட தமிழ் மொழி தின திறந்த போட்டியில் தோப்பூர் அல்-ஹம்றா மத்திய கல்லூரியில் உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களான என்.எம்.அசாம் அறிவிப்பாளர் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளதோடு, திறந்த விவாதப் போட்டியில் ஏ.எம்.அல்தாப், ஜே.எம்.அஸ்னிப், என்.எம்.அசாம் ஆகிய மாணவர்கள் முதலாம் இடத்தைப்பெற்று மாகாண மட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் உள்ளிட்ட பாடசாலை சமூகத்தினர் இம்மாணவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றனர்.

**படம்:** மூதூர் செய்தியாளர்

# முறையற்ற அனுமதிப்பத்திரம் பெற்று படகுச் சேவையில் ஈடுபடுவோரை தடுக்கக்கோரி ஆர்ப்பாட்டம்



கிண்ணியா செய்தியாளர்

திருகோணமலை, நிலாவெளி கடற்கரைப் பகுதியில் சுற்றுலாத்துறையாளர்களுக்கான புறாத் தீவு படகுச்சேவை இடம்பெற்றுவரும் நிலையில், முறையற்ற அனுமதிப்பத்திரம் பெற்று படகுச் சேவையில் ஈடுபடுவோரைத் தடுத்துநிறுத்தக்கோரி கவனயீர்ப்புப் போராட்டம் நிலாவெளி கடற்கரை பகுதியில் திங்கட்கிழமை(10) இடம்பெற்றது.

குறித்த ஆர்ப்பாட்டத்தை நிலாவெளி உல்லாசப் பிரயாணிகளின் படகு மற்றும் சேவை கூட்டுறவு சங்கம் ஏற்பாடு செய்திருந்தது.

பல வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

தங்களது சங்கம் ஊடாக அனுமதி பெற்று சுழற்சி முறையில் முறையாகத் தொழிலை சுமார் 15 வருடங்களுக்கு மேலாக மூவினங்களையும் சேர்ந்த நாம் செய்து வருகிறோம். ஆனால், முன்னாள் வனஜீவராசித் திணைக்கள அதிகாரி ஒருவர் முறையற்ற விதத்தில் வேறொருவரின் பேரில் அனுமதிப்பத்திரத்தை வைத்து படகுச் சேவையில் ஈடுபடுகிறார். இதனால் தங்களது தொழில் பாதிக்கப்படுகிறது. இதனை உடனடியாக நிறுத்த வேண்டும்.

எங்களது சங்கத்தில் பலர் இந்தத் தொழிலை நம்பியே தினத் தொழிலின்றி சுழற்சி முறையில் ஈடுபடுகிறோம். ஆனால், குறித்த முறையற்ற அனுமதிப்பெற்ற நபரின் படகு, புறாதீவில் தினமும் சேவையில் ஈடுபடுகின்றது.

நாம் எமது வாழ்வாதாரத்தை இழக்கும் நிலையில் இருக்கிறோம். இது தொடர்பில் உரிய அதிகாரிகளிடத்தில் பலமுறை முறையிட்டும் கோரிக்கைக்கான தீர்வு கிடைக்கப்பெறவில்லை. இனியாவது நிரந்தரத்தீர்வை உரிய அதிகாரிகள் பெற்றுத்தர வேண்டும் என கவனயீர்ப்பில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

# வீடுவீடாகச் சென்று டெங்கு ஒழிப்பு பரிசோதனை



பாண்டிருப்பு செய்தியாளர்

களுவாஞ்சிக்குடி பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் டெங்கு கட்டுப்பாட்டு விசேட வேலைத்திட்டம் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி வழிகாட்டலில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ்.யோகேஸ்வரன் ஒழுங்கமைப்பில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இங்கு கடந்த 26ஆம் திகதியிலிருந்து துறைநீலாவணை, பெரிய கல்லாறு, கோட்டைக்கல்லாறு, ஓந்தாட்சி மடம், எருவில், மகிழூர், குறுமண்வெளி, பட்டிருப்பு, களுவாஞ்சிக்குடி, களுதாவளை, தேற்றாத்தீவு, மாங்காடு, செட்டிபாளையம், குருக்கள் மடம் ஆகிய கிராமங்களில் வீடுவீடாகச் சென்று டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் பரிசோதனை செய்யப்பட்டு வருகின்றன.

இப் பரிசோதனை நடவடிக்கைகளில் பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர்கள், டெங்கு ஒழிப்பு கட்டுப்பாட்டு செயலணியினர், பொலிஸார் ஆகியோர் இணைந்து மேற்படி வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

கோட்டைக்கல்லாறு கிராமத்தில் பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் தலைமையிலான குழுவினர் வீடு வீடாகச் சென்று டெங்கு பரிசோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன் சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருக்காதோருக்கு எதிராகவும் சட்டநடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

# அக்கரைப்பற்று பெண்கள் அரபுக்கல்லூரிக்கு புதிய கல்வியாண்டுக்கான விண்ணப்பம் கோரல்

மீரா நகர் செய்தியாளர்

அறிவு, ஆன்மீகம், பண்பாட்டுத்திறன் விருத்தி சார் பெண் ஆளுமைகளை உருவாக்கும் இலட்சியப்பணியில் அக்கரைப்பற்று மன்பஉல் ஹைறாத் பெண்கள் அரபுக் கல்லூரி 2023/2024 ஆம் கல்வியாண்டுக்காக புதிய மாணவியர்களை இணைத்துக்கொள்வதற்கான விண்ணப்பம் தற்போது கோரப்பட்டுள்ளது.

ஐந்து வருட முழு நேரத்தைக் கொண்ட இக் கற்கைநெறியோடு, அரபு மொழி மற்றும் ஷரீஆ கற்கை நெறிக்கான சான்றிதழ் பெறல், க.பொ.த. உயர்தரம் மற்றும் அல்-ஆலிம் அரசாங்க பரீட்சைகளுக்குத் தோற்ற வைத்தல், விசேட வழிகாட்டல்கள் பயிற்சி நெறிகள் மற்றும் பாடநெறிகள், தொழில்சார் வழிகாட்டல்கள், ஆங்கில, சிங்கள மொழிப்பாடநெறிகள் போன்ற இன்னும் பல துறைசார் கற்கை நெறிகளும் போதிக்கப்படவுள்ளன.

விண்ணப்பப்படிவங்களை அக்கரைப்பற்று -அம்பாறை வீதியிலுள்ள மன்பஉல் ஹைறாத் அரபுக்கல்லூரிக்கு நேரில் சென்று அல்லது 0672279590 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஜூலை 20ஆம் திகதிக்குள் விண்ணப்பிக்குமாறு நிர்வாகத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# கஞ்சாவுடன் கைதானவருக்கு விளக்கமறியல்

கோணாவத்தை செய்தியாளர்

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாகாம வீதியில் கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கஞ்சா வைத்திருந்தமை தொடர்பாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து உப பொலிஸ் பரிசோதகர் ஹஸீர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசத்துக்குச் சென்று சந்தேக நபர்கள் இருவரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஒருவரிடமிருந்து 550 மில்லி கிராம் கஞ்சாவும் மற்றைய நபரிடமிருந்து 525 மில்லி கிராமும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கஞ்சாவுடன் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களை ஞாயிற்றுக்கிழமை(09) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியவேளை, 14ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற பதில் நீதிபதி எஸ்.எல்.ஏ.றஸீட் உத்தரவிட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நெல்லுக்கான உத்தரவாத விலையை நிர்ணயம் செய்து கொள்வனவு செய்யக்கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்





திருக்கோவில் மேலதிக செய்தியாளர்

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு பகுதி விவசாயிகள் பல்வேறு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து திங்கட்கிழமை(10) காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அக்கரைப்பற்று சந்தை சதுரங்கத்தில் இருந்து ஆலையடிவேம்பு பிரதேச செயலகம் நோக்கி தமது ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

தற்போது அறுவடை ஆரம்பித்துள்ளதுடன் நெல்லின் உத்தரவாத விலையை நெல் அறுவடை செய்தவுடன் ஒரு கிலோவுக்கு 100 ரூபாவாகவும் காய்ந்த ஈரப்பதன் அற்ற நெல்லை கிலோ 120 ரூபாவாகவும் நிர்ணயம் செய்து உடனடியாக நெல் சந்தைப்படுத்தும் களஞ்சியசாலைகளை திறந்து நெல்லை முழுமையாகக் கொள்வனவு செய்யவேண்டுமெனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் கேட்டுக்கொண்டனர்.

மேலும் கடந்த கால அரச கொள்கையினால் உரங்கள் கிடைக்காமல் நஷ்டத்தை சந்தித்ததுடன் உற்பத்தி விலையை விட கொள்வனவு விலை குறைவாகக் காணப்படுவதால் தாம் நஷ்டமடைவதாகக் குறிப்பிட்ட அவர்கள் அரசினால் அறிவிக்கப்படும் மானியங்கள் உரிய நேரத்தில் தமக்கு வழங்கப்படுவதில்லை எனவும் இதற்கான நடவடிக்கைகளை உரிய அதிகாரிகள் ஊடாக அரசு மேற்கொள்ளவேண்டுமெனவும் வலியுறுத்தினர்.

நெல் உற்பத்தி ஒரு ஏக்கருக்கு ஒரு இலட்சத்து 60ஆயிரம் ரூபா செலவாகின்ற நிலையில், தற்போதைய உஷ்ணமான காலநிலையில் நெல் போதிய விளைச்சலின்றி 20 தொடக்கம் 25 மூடைகள் கிடைப்பதால் தாம் நஷ்டத்தை சந்திப்பதுடன் தற்போது ஒரு மூடை நெல் 3ஆயிரத்து 500 தொடக்கம் 4ஆயிரத்து 500 ரூபாவரை கொள்வனவு செய்வதால் 6ஆயிரம் ரூபா வரை நஷ்டம் ஏற்படுவதாகவும் விவசாயிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.

இதன்போது ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடத்துக்கு வருகை தந்த பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் இது தொடர்பில் தான் உரிய அமைச்சரிடமும் ஜனாதிபதியிடமும் ஆலோசித்து தீர்வைப் பெற்றுத்தருவதாகத் தெரிவித்தார். பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் ஆலையடிவேம்பு பிரதேச உதவிப் பிரதேச செயலாளரிடமும் விவசாய அமைப்புகள் ஒன்றிணைந்த மகஜரைக் கையளித்தனர்.

இதன்போது அம்பாறை உகன, தமன பிரதேச விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

# முச்சக்கரவண்டி விபத்தில் ஒரு வயது குழந்தை பலி

மண்டூர் செய்தியாளர்

கொக்குவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சர்வோதய வீதியில் இடம்பெற்ற விபத்தில் காத்தான்குடி பாலமுனை பிரதேசத்தைச் சேர்ந்த குழந்தை ஒன்று சம்பவ இடத்திலேயே பலியான சம்பவம் ஞாயிற்றுக்கிழமை(09) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிரதான வீதி புதிய பாலமுனை ஆரையம்பதி பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு வயதுடைய காலீதீன் முகமட் முஸ்பர் பாத்திமா மன்ஸாரா என்பவரே இவ்விபத்தில் பலியான குழந்தையாவார்.

சம்பவத்தினத்தன்று தனது தாய் மற்றும் முச்சக்கரவண்டி சாரதியுடன் பாசிக்குடா பிரதேசத்துக்குச் சென்று கொண்டிருக்கும் போது குறித்த வீதியில் முச்சக்கரவண்டி கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டதில் குறித்த குழந்தை உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

உயிரிழந்த குழந்தையின் உடல் நேற்று(10) சட்டவைத்திய அதிகாரியினால் மேற்கொள்ளப் பட்ட பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளை கொக்குவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கடற்கரையை சுத்தம் செய்யும் திட்டம் முன்னெடுப்பு



ஏறாவூர் செய்தியாளர்

கிழக்கு மாகாணத்தில் உல்லாசப் பயணத் துறையை ஊக்குவிக்கும் திட்டத்தையும் அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ளது. அந்தவகையில் இத்திட்டத்துக்கு ஆதரவளிக்கும் முகமாக மட்டக்களப்பு மாங்கேணி கடற்கரைப் பிரதேசம் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் ஹேலீஸ் விவசாய நிறுவனத்தினால் ஞாயிற்றுக்கிழமை(09) சுத்தம் செய்யப்பட்டது.

நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் ஏ.கே.பத்தேகம தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நிறைவேற்று அதிகாரி எஸ்.கே.என்.எப்.சிறிவர்தன மற்றும் ஊழியர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

மாங்கேணி பிரதேச கடற்கரையின் சுமார் 03 கிலோ மீற்றர் தூரம் சுத்தம் செய்யப்பட்டதுடன் கடலிலிருந்து கரையொதுங்கிய சுமார் ஐந்து தொன் எடையுள்ள பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பொருட்கள் இருநூறு பைகளில் சேகரிக்கப்பட்டன.

கிழக்கு மாகாணத்தில் உல்லாசப் பயணத்துறை ஊக்குவிப்புத் திட்டத்துக்கு கடற்கரைப் பிரதேச சுத்திகரிப்புப் பணிகள் பெரிதும் அனுகூலமாக அமையுமென்றும் இவற்றுக்கு அரசாங்கத்தினால் ஒதுக்கப்படும் நிதி மீதமாகுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

# பல்வேறு சூதாட்டத்தில் ஈடுபட்ட 28 பேர் கைது

அம்பாறை மாவட்ட செய்தியாளர்

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாண்டிருப்பு இந்து மயானத்துக்கருகில் உள்ள வெற்றுக்காணிகளில் தினமும் பணத்துக்காக சட்டவிரோதமாக ஒன்றுகூடி சூதாட்ட நடவடிக்கையில் சிலர் ஈடுபட்டு வருவதாக பொதுமக்களிடம் இருந்து பொலிஸாருக்கு தகவல் கிடைக்கப்பெற்றிருந்தது.

குறித்த முறைப்பாட்டுக்கமைய சம்பவம் தொடர்பில் பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜே.எஸ்.கே.வீரசிங்கவின் வழிநடத்தலில் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்து 28 சந்தேக நபர்களை ஞாயிற்றுக்கிழமை (09) மாலை கைது செய்தனர்.

சட்டவிரோதமாக ஒன்றுகூடி பல்வேறு சூதாட்டத்தில் ஈடுபட்டதாக கைதான அனைவரும் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் புதன்கிழமை (12) நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

# சின்னக்களுவான் ஆற்றில் முதலைகளின் தொல்லை

## நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை

தோப்பூர்

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தோப்பூர் சின்னக்களுவான் ஆற்றில் அண்மைக்காலமாக முதலைகளின் தொல்லை அதிகரித்துள்ளதால் வீதியால் பயணிக்கும் பயணிகள் அச்சத்துடன் பயணிப்பதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வீதியை பள்ளிக்குடியிருப்பு, இத்திக்குளம் மற்றும் சின்னக்குளம் போன்ற கிராம மக்கள் அதிகளவில் பயன்படுத்துவதோடு பள்ளிக்குடியிருப்பு கலைமகள் இந்துக் கல்லூரி மாணவர்களும் இவ்வீதியை அதிகளவில் பயன்படுத்தி வருகின்றனர்.

இரவு வேளையில் விவசாயிகள் வயல்களுக்கு நீர் பாய்ச்சுவதற்காக செல்கின்ற நிலையில், முதலைகள் அச்சத்தால் செல்ல முடியாதுள்ளதாகவும் இவ்வாற்றில் தூண்டில் மூலமும் வீச்சு வலை மற்றும் உடுவலை மூலமும் மீன்பிடியில் ஈடுபட்டு வந்த மீனவர்கள் முதலை அச்சத்தால் முழுமையாக மீன்பிடியிலிருந்து ஒதுங்கி இருப்பதாகவும் இதனால் பொருளாதார ரீதியாக அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, மூதூர் பிரதேச சபை அதிகாரிகள் இக்கழிவுகளை வீசுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதோடு முதலைகள் அபாய பலகையையும் காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தோப்பூர் பிரதேச பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



**திருகோணமலை மாவட்ட கங்கதலாவ ஐக்கிய ஊடக மன்றத்தின் இரண்டாம் வருட பூர்த்தியை முன்னிட்டு, அங்கத்தவர்களுக்கு புதிய ரி-சேர்ட் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இதற்கான நிதி அனுசரணையை கிண்ணியா எம்.எச்.எம்.பவுண்டேஷன் வழங்கியது. இதன் ஸ்தாபக தலைவரும் பிரபல சமூக சேவையாளருமான முஸ்லிமின் ஹாஜியார் மஸாகிர் ஊடக மன்றத்தின் சார்பாக அதன் தலைவர் அமதுரு அமரஜீவயினால் நினைவு சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். படம்: சீனக்குடா செய்தியாளர்**

# நெற்செய்கையில் கோரைப்புல் தாக்கம்

## விவசாயிகள் கவலை

நற்பிட்டிமுனை செய்தியாளர்

அம்பாறை மாவட்டத்திலுள்ள நெற்செய்கை பண்ணப்பட்ட பகுதிகளில் குடலைப்பருவத்தில் கதிர்தள்ளும் பருவத்தில் கோரைப்புல் தாக்கம் அதிகரித்து வருவது குறித்து விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கையால் அல்லது களைநாசினிகள் விசிறி அதனைக் கட்டுப்படுத்த முயன்றாலும் முடியாதிருப்பதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

கோரைப்புல் காரணமாக விசுறுகின்ற பசளை உறிஞ்சப்படுவதால் வேளாண்மை பச்சைப்பசேலென காணாமல் போவதாகத் தெரிவிக்கும் இவர்கள் இக்குறைபோக்க அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமெனவும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## போடியார் புலம்பல்!



*பாரதப்பிரதமர் மோடிக்கு 13ஆம் வாய்ப்பாட்டை அமுல்படுத்த சொல்லி குத்துவிளக்கு கூட்டமைப்பு கட்சிக்காறர்கள் கடிதம் அனுப்ப போறாங்களாம் ஜனாதிபதி ரணில் மோடிய சந்திக்கிறத்துக்கு முந்தி.. அப்ப தமிழீழம் சமஷ்டி சுயநிர்ணயம் மண்ணாங்கட்டி கத்தரிக்கா உரிம எரும எல்லாத்தயும் உட்டுப்போட்டு அந்த 1987 ல காட்டின 13ஆம் வாய்ப்பாட படிச்சுத்து காலத்த கடத்த ஏண்டாம்பி மெனக்கட்டு கடிதம் எழுதப்போறியள்.... மோடிக்கு கடிதம் தேவயில்ல அவருக்கு அந்த வாய்ப்பாடு நல்ல பாடம் உட்டுப்போட்டு சமஷ்டிய கேட்டு எழுதுங்கடா மடச்சாம்பிராணிகளே.! என்ன நான் சொல்லுறது சரியோ எலுவா.?*

# உலக செய்திகள்

## செய்திகளை வாசிப்பவர் உங்கள் 'ஏஐ லிசா'



ஒடிசாவில் தனியார் செய்தி நிறுவனமொன்று 'லிசா' ஏஐ செய்தி வாசிப்பாளரை அறிமுகப்படுத்தியுள்ளது.

அச்சு அசலாக இளம்பெண்ணை போன்ற தோற்றமளிக்கும் குறித்த செயற்கை நுண்ணறிவு செய்திவாசிப்பாளர் ஆங்கிலம், ஒடியா மொழிகளில் செய்திகளை வாசிக்கும் திறன் கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது.

# வெள்ளத்தில் மூழ்கிய இந்திய வடமாநிலங்கள்: மண்சரிவு - மின்னல் தாக்கி 58பேர் உயிரிழப்பு







இந்தியாவின் வட மாநிலங்களில் பெய்துவரும் கடும் மழை காரணமாக, தலைநகர் புதுடில்லி, இமாச்சல பிரதேசம், உத்தரகண்ட் உள்ளிட்ட பல மாநிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன், மண்சரிவு உள்ளிட்ட இயற்கை பேரிடர்களில் சிக்கி 58இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன் மக்கள் வெளியே வர முடியாமல், வீடுகளுக்குள்ளேயே முடங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

**உ.பியில் 34 பேர் உயிரிழப்பு**

உத்தரப் பிரதேச மாநிலத்தில் கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவில் சிக்கியும் மின்னல் தாக்குதலுக்குள்ளாகியும் 34 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதில் 17 பேர் மின்னல் தாக்கியும் 12 பேர் நீரில் மூழ்கியும் 05 பேர் மழை வெள்ளம் மற்றும் மண்சரிவில் சிக்கியும் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, உத்தரப் பிரதேசத்தின் 75 மாவட்டங்களில் 68 மாவட்டங்களில் கனமழை பெய்துள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**இமாச்சல பிரதேசத்தில் 14 பேர் பலி**

இதேவேளை, இமாச்சல பிரதேசத்தில் சிம்லா, குலு, மண்டி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பெய்துவரும் கடும் மழையால் ஏற்பட்டுள்ள வெள்ளம் மற்றும் மண்சரிவில் சிக்கி 14 பேர் உயிரிழந்துள்ளனர்.

## செனகல் படகு விபத்து: 300 பேர் மாயம்

செனகலில் புலம்பெயர்ந்தோர் பயணித்த மூன்று வெவ்வேறு படகுகள் விபத்துக்குள்ளானதில் சுமார் 300 பேர் காணாமல் போயுள்ளதாக சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

செனகலிலிருந்து ஸ்பெயினின் கேனரி தீவுகளுக்கு பயணித்த போதே மேற்படி படகு விபத்துகள் இடம்பெற்றுள்ளன. 15 நாட்களுக்கு முன்னர் செனகலிலிருந்து ஸ்பெயினின் கெனேரி தீவுகளுக்கு 65 பேருடன் பயணித்த படகொன்றும் மற்றும் 50 முதல் 60 பேரையும் ஏற்றிச் சென்ற மற்றுமொரு படகும் காணாமல்போயுள்ளது. மேற்படி படகுகளில் பயணித்தவர்கள் குறித்த தகவல்கள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

இதேபோன்று கடந்த ஜூன் 27ஆம் திகதி சுமார் 200 பேருடன் மூன்றாவது படகு செனகலில் இருந்து சென்றுள்ளது. எனினும் படகில் பயணித்தவர்கள் குறித்த தகவல்கள் இதுவரை கிடைக்கபெறவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தடைசெய்யப்பட்ட கொத்து குண்டுகளை உக்ரைனுக்கு வழங்கும் அமெரிக்கா

பல்வேறு நாடுகளில் தடை செய்யப்பட்டுள்ள, கிளஸ்டர் பொம் எனப்படும் கொத்து குண்டுகளை உக்ரைனுக்கு வழங்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது. இதற்கு பல்வேறு நாடுகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

நேட்டோ கூட்டமைப்பில் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த 2022ஆம் ஆண்டு பெப்ரவரி 24ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தது. இந்தப் போர் இன்றுடன் 500 நாட்களை கடந்து இடம்பெற்று வருகிறது. இந்த போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா மற்றும் மேற்கத்தேய நாடுகள் ஆயுத உதவி செய்து வருகின்றன.



இதனால் ரஷ்யப் படை உக்ரைன் இராணுவத்தை சமாளிக்க முடியாமல் திணறி வருகிறது.

எனினும், உக்ரைனின் சில நகரங்களை ரஷ்யா கைப்பற்றியுள்ளது. உக்ரைனுக்கு ஏவுகணைகளை தாக்கி அழிக்கும் அமைப்பு, ரொக்கெட் போன்ற ஆயுதங்களை அமெரிக்கா வழங்கியுள்ளது.

இதற்கிடையே, கொத்து குண்டுகளை வழங்குமாறு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனிடம், உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி வலியுறுத்தியுள்ளார். இதையடுத்து, மிக ஆபத்தான கொத்து குண்டுகளை உக்ரைனுக்கு வழங்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

கொத்து குண்டுகள் 100இற்கும் மேற்பட்ட நாடுகளில் தடை செய்யப்பட்டுள்ளன.

அவற்றை உக்ரைனுக்கு வழங்கும் அமெரிக்காவின் முடிவுக்கு பிரித்தானியா, கனடா, நியூசிலாந்து, ஸ்பெயின் ஆகிய நாடுகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

இந்த வகை குண்டுகள் பொதுமக்களுக்கு அதிக ஆபத்து ஏற்படுத்தும். ஏராளமான சிறு குண்டுகளை இந்த கொத்து குண்டுகள் உமிழும். மிக அதிகமான பரப்பளவுள்ள பகுதிகளை இந்த குண்டுகளால் தாக்கி அழிக்க முடியும். இதனால், இந்த குண்டுகள் பல நாடுகளில் தடை செய்யப்பட்டுள்ளன.

இதுகுறித்து அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன் தெரிவிக்கையில்,

கொத்து குண்டுகளின் ஆபத்து காரணமாகவே உக்ரைனுக்கு அவற்றை அளிப்பது தாமதப்படுத்தப்பட்டது. ஆனால், உக்ரைனில் ஆயுத பற்றாக்குறை ஏற்படுவதை அனுமதிக்க முடியாது. உக்ரைனுக்கு அனுப்பப்படும் அமெரிக்க கொத்து குண்டுகள், ரஷ்யாவால் போரில் பயன்படுத்தப்பட்ட குண்டுகளைவிட மிகவும் பாதுகாப்பானவை - என்றார்.

## கராத்தே சம்பியன்ஷிப் போட்டியில் தென்கிழக்கு பல்கலை மாணவர்கள் 40 பதக்கங்கள் பெற்று சாதனை



*நிந்தவூர் நிருபர்*

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்ற கிழக்கு மாகாண கராத்தே போட்டியில், கிழக்கு மாகாண கராத்தே சம்மேளன தலைவர் சிஹான் முகம்மத் இக்பால் தலைமையில் பயிற்சி வழங்கப்படுகின்ற ஐ.எம்.ஏ. சங்கம் மற்றும் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் மொத்தமாக 40 பதக்கங்களை பெற்றுள்ளனர்.

இதில் சிரேஷ்ட பிரிவில் ஏ.கே.எம். ஹஸ்னத் கான் கறுப்புப்பட்டி காத்தாவிலும் ஏ.எம்.இர்பான் கறுப்புப்பட்டி 84 கிலோ குமிதேவிலும் ஏ.எப்.ஏ.ஆஸிக் இலாஹி கறுப்புப்பட்டி 67 கிலோ குமிதேவிலும் எச்.எம்.சஸீன் கறுப்புப்பட்டி 60 கிலோ குமிதேவிலும் என்.எம்.உமைர் காதாதாவிலும் குமிதேவிலும் எல்.ரீ.ஏ.லியனகே காத்தாவிலும் குமிதேவிலும் எம்.எம்.றிகாஸ் குமிதேவிலும் எம்.எச். முர்சதீன் குமிதேவிலும் எஸ்.எச்.எம்.நவோதா குமிதேவிலும் எச்.எம்.இஸ்ஹான் ஹர்ஸனா குமிதேவிலும் ஜீ.டீ.பி.பிரஸாத் குமிதேவிலும் ராஜகருணா குமிதேவிலும் ஸீ.மதுபாஸிதா குமிதேவிலும் தாறுக்கா ஜயசிங்க குமிதேவிலும் தங்கப்பதக்கங்களை வென்றனர்.

21 வயதுப் பிரிவில் ஐ.மிப்ராத் காத்தாவிலும் குமிதேவிலும் எம்.ஆர்.றுஸ்லி அஹமட் குமிதேவிலும் 13 வயதுப் பிரிவில் எம்.ஏ.அம்மார் காத்தாவிலும் எம்.ஐ.எம். உமைர் காத்தாவிலும் எம்.ஆர்.எம்.றீஸா குமிதேவிலும் தங்கப் பதக்கங்களை வென்றனர். இதில் தங்கப் பதக்கங்களையும் வெள்ளிப் பதக்கங்களையும் பெற்ற மாணவர்கள் தேசிய கராத்தே போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

ஐ.சி.சி. உலகக்கிண்ண தகுதிகாண் தொடர் - 2023

## தோல்வியின்றி சம்பியன் பட்டம் வென்ற இலங்கை



ஐ.சி.சி. ஒருநாள் உலகக்கிண்ண தகுதிகாண் தொடரின் இறுதிப் போட்டியில் நெதர்லாந்தினை 128 ஓட்டங்களால் வீழ்த்திய இலங்கை அணி தொடரின் சம்பியனாக மகுடம் சூடியது. மேலும் குறித்த தகுதிகாண் தொடரில் எந்தப் போட்டிகளிலும் தோல்வியுறாமல் கிண்ணத்தை கைப்பற்றியுள்ள இலங்கை அணி ஒருநாள் போட்டிகளில் எதிரணிகளின் அனைத்து விக்கெட்டுகளையும் தொடர்ச்சியாக 10 தடவைகள் கைப்பற்றி வெற்றி பெற்ற அணியாக புதிய மைல்கல் ஒன்றினை நிலைநாட்டியிருப்பதோடு, தொடர்ச்சியாக ஒருநாள் போட்டிகளில் 10ஆவது வெற்றியினையும் பதிவு செய்தது.

ஒருநாள் உலகக் கிண்ண தகுதிகாண் சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் ஹராரே நகரில் ஆரம்பமாகியது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 47.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 233 ஓட்டங்களை எடுத்துக் கொண்டது.

234 என்ற இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து அணி, டில்சான் மதுசங்க, வனிந்து ஹஸரங்க மற்றும் மகீஷ் தீக்ஷன ஆகியோரின் பந்துவீச்சில் தடுமாறி 23.3 ஓவர்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் பறிகொடுத்து 105 ஓட்டங்களுடன் போட்டியில் படுதோல்வி அடைந்தது.

போட்டியின் ஆட்டநாயகனாக இலங்கை அணியின் வேகப்பந்துவீச்சாளரான டில்சான் மதுசங்க தெரிவாக, தொடர் நாயகன் விருது சிம்பாப்வே அணியின் சகலதுறைவீரர் சோன் வில்லியம்ஸுக்கு வழங்கப்பட்டது. அதனை சக வீரர் சிக்கந்தர் ராஸா பெற்றுக்கொண்டார்.

Sri Lanka Cricket
தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Dialog

## யாழ். மாவட்ட வங்கிகளுக்கு இடையிலான கிரிக்கெட் தொடரில் இலங்கை வங்கி சம்பியன்



*சாவகச்சேரி நிருபர்*

சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட யாழ் மாவட்ட வங்கிகளுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இலங்கை வங்கி அணி வெற்றி பெற்றது.

06 வங்கி அணிகள் பங்குபற்றிய குறித்த தொடரின் இறுதிப்போட்டி கடந்த வாரம் கந்தரோடை ஸ்கந்தவரோதய கல்லூரியில் இடம்பெற்றது. இதில் மக்கள் வங்கி அணியினை வீழ்த்தி இலங்கை வங்கி அணி வெற்றிக் கிண்ணத்தை பெற்றுக்கொண்டது.

மேற்படி சுற்றுத் தொடரின் சிறந்த வீரராக இலங்கை வங்கி உத்தியோகத்தர் ஐங்கரனும் சிறந்த துடுப்பாட்ட வீரராக மக்கள் வங்கி அணியைச் சேர்ந்த அங்குசனும் சிறந்த பந்து வீச்சாளராக இலங்கை வங்கி அணியைச் சேர்ந்த டக்சனும் தெரிவாகியிருந்தனர்.

இலங்கை வங்கி, கிருபா லேணர்ஸ் மற்றும் கஜா விருந்தினர் விடுதி ஆகியவற்றின் அனுசரணையுடன் இடம்பெற்ற போட்டியில் பிரதம விருந்தினராக இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான முன்னாள் உதவி மாவட்ட ஆணையாளர் ரோட்டரியன் சுகந்தன் கலந்து சிறப்பித்திருந்தார்.

## மெகா நைட் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் சம்பியனான அட்டாளைச்சேனை சோபர்



*பொத்துவில் நிருபர்*

அட்டாளைச்சேனை நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் 42ஆவது ஆண்டு நிறைவினையொட்டி, அக்கழகத்தினால் நடாத்தப்பட்ட மெகா நைட் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் அட்டாளைச்சேனை சோபர் அணி வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தினை சுவீகரித்துக்கொண்டது.

சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி அண்மையில் அட்டாளைச்சேனை நியூ ஸ்டார் கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இதில் அட்டாளைச்சேனை சோபர் - சாய்ந்தமருது ஈஸ்டன் பேள்ஸ் ஆகிய அணிகள் மோதிக்கொண்டன. 39 ஓட்டங்களை வெற்றி இலக்காகக்கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சோபர் அணியினர் 05 ஓவர்களில் 03 விக்கெட்டுகளை இழந்து வெற்றியடைந்தனர்.

நியூ ஸ்டார் கழத்தின் தலைவர் ஏ.எச்.அஸ்லம் தலைமையில் இடம்பெற்ற இறுதிப்போட்டி மற்றும் பரிசளிப்பு நிகழ்வில் செக்டோ ஸ்ரீலங்கா நிறுவனத்தின் தலைவர் சட்டத்தரணி ஏ.எல்.நியாஸ், டொக்டர் எஸ்.எல்.எம்.முனாஸ்டீன், நியூஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் முன்னாள் தலைவர்களான அதிபர் எம்.ஐ.எம்.றியாஸ், ஆசிரியர் எம்.ஐ. ஹாபில் உள்ளிட்ட பலர் அதிதிகளாக கலந்துகொண்டனர். குறித்த கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள 48 முன்னணி கழகங்கள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.



DSI நிறுவனம் நடத்திய 15க்கும் மேற்பட்ட அணிகள் பங்கேற்ற கரப்பந்தாட்ட சமரில் 17 வயது பிரிவில் மட்டக்களப்பு குருக்கள்மடம் கலைவாணி மகா வித்தியாலயம் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றது. இப்போட்டியானது மட்டக்களப்பு சந்திவெளியில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (குருக்கள்மடம் செய்தியாளர்)

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7